இலக்கு
வாராந்த மின்னிதழ்
GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 407
சனி, 05 செப்டெம்பர், 2026 | பக்கங்கள் 13
www.ilakku.org













# வலி வடக்குக் காணி அபகரிப்பு விவகாரம்: தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் பாதிக்கப்பட்டோர் கோரிக்கை



மஹிந்த அரசாங்கத்தில் 2013ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வலி வடக்கு காணி சுவீகரிப்பு வர்த்தமானியை நீக்குவதற்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அநுர தலைமையிலான அரசாங்கத்திற்கு அழுத்தம் வழங்க வேண்டும் என காணியை இழந்த மக்கள் கூட்டமைப்பின் செயற்பாட்டாளர் ஜான்சன் பிரிடாரோ வேண்டுகோள் விடுத்தார்.

யாழ். வலி வடக்கு, மயிலிட்டி பகுதியில் இன்று வெள்ளிக்கிழமை (04) 20ஆவது வாரமாக இடம்பெற்ற நில மீட்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், வலி வடக்கு மக்களின் சுமார் 6,317 ஏக்கர் காணிகளை மஹிந்த அரசாங்கம் கையகப்படுத்தி வர்த்தமானி வெளியிட்டது.

மாற்றம் என்ற போர்வையில் ஆட்சிக்கு வந்த அநுரகுமார தலைமையிலான அரசாங்கமும் குறித்த வர்த்தமானியை நீக்காமல் கடந்த கால அரசுகளைப் போல் மக்களின் காணிகளை கையகப்படுத்தி வைத்துள்ளது. வலி வடக்கு பகுதியில் தமது சொந்த நிலங்களை விடுவிக்குமாறு கோரி மூன்று இடங்களில் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் மக்களின் காணிகளை மக்களுக்கு வழங்குவோம் எனக் கூறி ஆட்சிக்கு

தொடர்ச்சி: பக்கம் 11

## அமெரிக்கக் கடல்சார் ஆணைக்குழு அதிகாரிகள் இலங்கைக்கு விஜயம்



அமெரிக்க அரசின் கடல்சார் ஆணைக் குழுவின் தலைவர் லோரா டிபெல்லா (Laura DiBella) மற்றும் ஆணையாளர் ரொபர்ட் ஜே. ஹார்வி (Robert J. Harvey) ஆகியோர் செப்டெம்பர் 6 முதல் 10ஆம் திகதி வரை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

அமெரிக்கா-இலங்கை இடையிலான கடல்சார் வர்த்தகம், முதலீடு மற்றும் கப்பல் போக்குவரத்து உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும்

தொடர்ச்சி: பக்கம் 11

## வடக்கு – கிழக்கில் குடிப்பரம்பலை மாற்றும் நடவடிக்கைகள் தொடர்கின்றன – சாணக்கியன்



இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் வைபே டி போயரை சந்தித்த இலங்கைத் தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், வடக்கு – கிழக்கு தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அரசியல், காணி மற்றும் வாழ் வாதாரப் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடினார்.

தமிழ் மக்களின் குடிப்பரம்பலை மாற்றும் நோக்கிலான நடவடிக்கைகள் கடந்த ஆட்சிகளைப் போலவே தற்போதைய அரசாங்கத்தின் கீழும் தொடர்வதாக அவர் தெரிவித்தார். குறிப்பாக, மயிலத்தமடு

தொடர்ச்சி: பக்கம் 11

# செங்கடல் கடற்கரைப் பகுதியில் மிகத் தீவிரமான மோதல் – 81 பேர் பலி



செங்கடல் கடற்கரைப் பகுதியில் மிகத் தீவிரமான மோதல்கள் முக்கியமாக அல்-பரா (Al-Barah) மற்றும் மக்பனா (Maqbanah) ஆகிய இரண்டு மாவட்டங்களில் நடைபெற்றன. அல்-நஸ்ர் படைப்பிரிவின் (Al Nasr Brigade) செயல்பாட்டுத் தலைவரின் கூற்றுப்படி, தைஸ் (Taiz) நகருக்கு மேற்கே ஏமன் அரசுப் படைகள் சில பகுதிகளை இழந்துள்ளன; அதேவேளையில் அன்சார் அல்லாஹ் ஹூதி (Ansar Allah Houthi) இயக்கம் அப்பகுதிகளில் சிலவற்றைக் கைப்பற்றியுள்ளது.

அரசு கட்டுப்பாட்டில் உள்ள அல்-மக்கா (Mocha) மற்றும் தைஸ் ஆகிய இடங்களில் நிறுத்தப்பட்டுள்ள படைகளுக்குத் தேவையான பொருட்களை விநியோகிக்க அரசு ஒரு முக்கிய சாலையைப் பயன்படுத்துகிறது. ஹூதிகள் இந்த முக்கிய விநியோகப் பாதையைத் துண்டித்தால், அது அவர்களின் நிலையை மேலும் வலுப்படுத்தும்; அத்துடன் அல்-மக்காவைக் கைப்பற்றுவதற்கான ராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளவும் அந்த ஏமன் குழுவை அது தூண்டக்கூடும். நிலைமை இந்த திசையில்தான் செல்கிறது என்று பல நிபுணர்கள் கருதுகின்றனர்.

செங்கடல் கடற்கரைப் பகுதிகளில் நடைபெற்ற சண்டைகளில், இரு தரப்பிலும் குறைந்தது 81 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று ஏஎஃப்பி (AFP) செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது; இது இரண்டு

தொடர்ச்சி: பக்கம் 11

## இஸ்ரேலிய நடவடிக்கை சர்வதேச சட்டத்தை மீறியுள்ளது – ஐக்கிய நாடுகள் சபை



ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் உள்ள மூன்று அகதிகள் முகாம்களில் வசித்த மக்கள் அனைவரையும் வெளியேற்றிய இஸ்ரேலிய நடவடிக்கையானது (தற்போது அவர்கள் மீண்டும் தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பவும் தடுக்கப்பட்டுள்ளனர்) சர்வதேச சட்டத்தை மீறும் செயல் என்று ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர் அலுவலகம் (OHCHR) வெள்ளிக்கிழமை(4) வெளியிட்ட அந்த அறிக்கையில், 'அயர்ன் வால்' (Iron Wall) எனப்படும் தற்போதைய நடவடிக்கையின் ஒரு பகுதியாக, குடியிருப்பாளர்களை வெளியேற நிர்ப்பந்திப்பதற்காக இஸ்ரேலியப் படைகள் வீடு வீடாகச் சென்று நடவடிக்கைகளை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி மற்றும் பிப்ரவரி 2025-ல் ஜெனின், நூர் ஷம்ஸ் மற்றும் துல்கர்ம் ஆகிய அகதிகள் முகாம்களில் நடத்தப்பட்ட சோதனைகளின்போது பொதுமக்கள் கொல்லப்பட்டனர், நூற்றுக்கணக்கான வீடுகள் அழிக்கப்பட்டன, சாலைகள் மற்றும் பிற உள்கட்டமைப்புகள் சேதப்படுத்தப்பட்டன, மேலும் குடிநீர் மற்றும் மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டன.

அக்டோபர் மாதத்திற்குள், இஸ்ரேலிய நடவடிக்கையின் விளைவாக ஜெனின் அகதிகள் முகாமில் 52 சதவீத கட்டிடங்களும், நூர் ஷம்ஸ் முகாமில் 48 சதவீதமும், துல்கர்ம் முகாமில் 36 சதவீதமும் அழிக்கப்பட்டோ அல்லது சேதமடைந்தோ இருந்தன; மேலும் அம்முகாம்களில் வசித்த மக்கள் அனைவரும் கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர்.

அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலகட்டத்தில், இஸ்ரேலியப் படைகள் 21 குழந்தைகள் உட்பட 102 பாலஸ்தீனியர்களைக் கொன்றன; இக்காலகட்டத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேலியப் படைகளால் நடத்தப்பட்ட மொத்தக் கொலைகளில் இது 46 சதவீதமாகும்.

## பிரிட்டன் ஒரு "பெரும் சரிவை" (Great Collapse) எதிர்கொண்டுள்ளது.



பிரிட்டனுக்குத் தேவைப்படும் தலைவர் பர்ன்ஹாம் அல்ல என்று 'தி டெலிகிராப்' (The Telegraph) நாளிதழ் குறிப்பிடுகிறது. நாடு ஒரு முழுமையான நிதி நெருக் கடியின் விளிம்பில் உள்ளது; செலவுகளைக் கடுமையாகக் குறைப்பதும் வரிகளை உயர்த்துவதும் அதற்கு அவசியமாகிறது. ஆனால், பிரதமர் பிரிட்டிஷ் மக்களுக்கு இதற்கு நேர்மாறான வாக்குறுதியையே அளித்துள்ளார். இப்போது, அரசியல் ரீதியாகத் தற்கொலை செய்துகொள்வதா அல்லது தன்னைச் சுற்றியுள்ள அனைவருடனான உறவுகளையும் முற்றிலுமாக முறித்துக்கொள்வதா என்ற இக்கட்டான தேர்வை பர்ன்ஹாம் எதிர்கொண்டுள்ளார்.

அந்தக் கட்டுரையின் ஆசிரியரின் கூற்றுப்படி, பிரிட்டன் ஒரு "பெரும் சரிவு" காலத்திற்குள் நுழைகிறது. நாட்டின் கடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 94%

தொடர்ச்சி: பக்கம் 11

## நேபாளத்தில் மீட்புப் பணிகளுக்கு உதவும் வாட்ஸ்அப் குழு



நேபாளத்தின் வெள்ள மீட்புப் பணிகளுக்கு ஹெலிகாப்டர்கள் மற்றும் அகழ்விகள் மட்டுமல்லாமல், ஒரு வாட்ஸ் அப் குழுவும் உதவுகிறது என தெரிவிக்கப்படுகின்றது.வெள்ளம் வருவதற்கு முன்பே பொறியாளர்கள் இந்தக் குழுவை அமைத்தனர். தற்போது இதில் 500-க்கும் மேற்பட்டஉறுப்பினர்கள்உள்ளனர். இவர்கள், சேற்றுக்கு அடியில் புதைந்துள்ளவற்றைக் கண்டறிய மீட்புப் பணியாளர்களுக்கு உதவுகிறார்கள்.

அதிகாரிகள் பழைய ஆலை வரைபடங்களைக் கேட்டுப் பதிவிடுகின்றனர், சில நிமிடங்களிலேயே முன்னாள் தொழிலாளர்கள் மின் உற்பத்தி நிலையங்களின் திட்ட வரைபடங்கள், சுரங்கப்பாதை வரைபடங்கள் மற்றும் அணுகல் புள்ளிகளைத் திருப்பி அனுப்புகின்றனர்.

மேலும்,உறுப்பினர்கள் காணாமல் போனவர்களின் பெயர்களையும் தொலைபேசி எண்களையும் பகிர்ந்து கொள்கின்றனர். இது, வெள்ளம் வந்தபோது மக்கள் எங்கே இருந்திருக்கலாம் என்பதைக் கண்டறிய மீட்புப் பணியாளர்களுக்கு உதவுகிறது.

தொடர்ச்சி: பக்கம் 11

## பொறுப்புக்கூறலை வலுப்படுத்த வேண்டும்: ஐ.நா. வலியுறுத்தல்!

மனித உரிமை மீறல்கள் தொடர்பான பொறுப்புக்கூறலை வலுப்படுத்துதல், நல்லிணக்கம் மற்றும் தீர்வு நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அலுவலகம் வலியுறுத்தியுள்ளது.



ஜெனீவாவில் நேற்று முந்தினம் (3) வெளியிடப்பட்ட அறிக்கையில், 2025 ஒக்டோபர் முதல் 2026 ஜூலை வரையான காலப் பகுதியில் இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பான விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

டிட்வா புயலால் ஏற்பட்ட பாதிப்புகள், உலகளாவிய எரிபொருள் விலை உயர்வு உள்ளிட்ட சவால்களுக்கு இலங்கை முகங்கொடுத்ததாகவும், ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள், காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அறிக்கை குறிப்பிடுகிறது.

எனினும், சீர்திருத்தங்கள் தொடர்பில் அரசாங்கம் உறுதியளித்துள்ள போதிலும், பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுவது குறித்து ஐ.நா. கவலை வெளியிட்டுள்ளது. இதன் காரணமாக தன்னிச்சையான கைதுகள் மற்றும் குற்றச்சாட்டுகள் இன்றி நீண்டகாலம் தடுத்து வைக்கப்படும் சம்பவங்கள் தொடர்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான கண்காணிப்பு, அச்சுறுத்தல்கள் தொடர்வதுடன், காணி மற்றும் மதத் தலங்கள் தொடர்பான பதற்றங்களும் நீடிப்பதாக அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

“பதவி அதிகார துஷ்பிரயோகம், அடக்குமுறைச் சட்டங்கள், காவலில் இடம்பெறும் வன்முறைகள் மற்றும் தண்டனைவிலக்கு கலாசாரத்தை முடிவுக்குக் கொண்டுவர அரசாங்கத்துக்கு இன்னும் ஒரு வாய்ப்பு உள்ளது” என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வொல்கர் டேர்க் தெரிவித்துள்ளார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பதிவுகளின்படி, 2025ஆம் ஆண்டில் 602 சித்திரவதை மற்றும் வன்கொடுமை தொடர்பான முறைப்பாடுகளும், 2026 ஏப்ரல் வரை 138 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன. இதேவேளை, காவலில் இடம்பெற்ற மரணங்களும் பதிவாகியுள்ளதாக அறிக்கை தெரிவிக்கிறது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் முழுமையாக நீக்கப்படும் வரை அதன் பயன்பாட்டுக்கு இடைக்காலத் தடை விதித்தல், நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை விடுவித்தல், மனித உரிமை மீறல்களில் நம்பகமான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளானவர்களை உயர் பதவிகளில் இருந்து விலக்குதல் உள்ளிட்ட நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என ஐ.நா. வலியுறுத்தியுள்ளது.

மேலும், பாதிக்கப்பட்டவர்களின் நினைவேந்தல் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதுடன், இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

---

## மீனவர் பிரச்சினை குறித்து கலந்துரையாட இலங்கை அதிகாரிகள் இந்தியா பயணம்

கச்சதீவு இலங்கையின் இறையாண்மைக்கு உட்பட்டது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை என கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று (04) ஊடகவியலாளர்களிடம் கருத்து தெரிவித்த அவர், எதிர்வரும் 25ஆம் திகதி இலங்கை அதிகாரிகள் இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளதாகக் குறிப்பிட்டார். இந்தப் பயணம் கச்சதீவு விவகாரம் தொடர்பானது அல்ல என்றும், இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால மீனவர் பிரச்சினைகள் மற்றும் நடைமுறைச் சிக்கல்கள் குறித்து கலந்துரையாடுவதற்காகவே இடம்பெறுவதாகவும் தெரிவித்தார்.

இந்திய இழுவைப்படகுகள் இலங்கை கடற்பரப்புக்குள் அத்து மீறி நுழைவதால் வடக்கு மீனவர்களின் தொழிலும் கடல்வளமும் பாதிக்கப்படுவதாகக் குறிப்பிட்ட அமைச்சர், சட்டவிரோத மீன்பிடியைத் தடுப்பதற்கும் கடல் எல்லையைப் பாதுகாப்பதற்கும் பேச்சுவார்த்தைகளில் முன்னுரிமை வழங்கப்படும் என்றார்.

---

## ஆசிரியர் தலையங்கம் | 05 செப்டெம்பர், 2026

### உலகின் தந்திரோபாயப் போக்குகளை கவனத்திலெடுத்தல்: ஈழத்தமிழர் இறைமையை மீளுறுதிப்படுத்த அவசியம்

உலக அரசியலில் நாடுகளில் ஆட்சியில் உள்ளவர்கள் தங்கள் அதிகாரத்தைத் தக்கவைப்பதிலும் ஆட்சிக்காலத்தை நீடிப்பதற்கும் தந்திரோபாய முயற்சிகளைச் செய்கின்ற மாதமாக 2026 செப்டெம்பர் மாதம் ஆரம்பமாகியுள்ளது.

அமெரிக்காவின் அரசத்தலைவர் டொனால்ட் ட்ரம்ப் உள்நாட்டில் ஆதரவு இழப்புக்களை நவம்பர் மாத உள்ளூராட்சி தேர்தல்களுக்கான வேட்பாளர் தெரிவுகளில் உணர்கின்ற அதே நேரத்தில் அமெரிக்காவின் முன்னைய கூட்டாண்மைகளில் பங்காண்மைகளில் இருந்து விலகி “டீல்” உருவாக்கும் தந்திரோபாயத்தை மையப்படுத்தி ஈரான் மத்திய கிழக்கு, சீனா வடகொரியா தென் அமெரிக்கா உடன் முன்னெடுத்தார். கூடவே பொருளாதாரத் தடை உயர் வரி விதிப்புப் பேர அரசியலையும் படைபலத்தால் இனங்காணக்கூடிய அச்சத்தை விளைவிக்கிறது, இனஅழிப்பு பாணியானது என அரசியல் ஆய்வாளர்கள் விமரிசிக்கும் அளவுக்கு ஈரானில் இஸ்ரேலுடன் இணைந்து நடாத்தும் போரினையும் முன்னெடுத்தார். ஆயினும் டீலிலும் சரி போரிலும் சரி வெற்றி பெற இயலாத நிலையிலேயே உள்ளார். ஆயினும் வெனிசுலாவுடன் 67 பில்லியன் பரல்கள் எண்ணெய்க்கான டீலை மேற்கொண்டுள்ளதாக அறிவித்து மகிழும் மாதமாகச் செப்டெம்பர் அவருக்குப் பிறந்துள்ளது. ஜேர்மனியில் ஏ. எவ். டீ அதிதீவிர வலதுசாரி ஆட்சி மாநிலமளவில் அமைந்துள்ளது. போக்லாந்தை ஆர்ஜன்டீனா தனது என பிரித்தானியாவின் போக்லாந்து மேலான இறைமைக்குச் சவால் விடுப்பது என்பன ட்ரம்பின் அமெரிக்காவை பெரிய அமெரிக்காவாக மீளமைத்தல் என்கிற அரசியல் கோட்பாட்டின் பரவலாக அமைந்துள்ளது.

இந்நிலையில் அமெரிக்காவின இந்த “டீல்” உருவாக்கும் அரசியல் தந்திரேபாயத்தை உலகின் சிறுதேச இனங்களுள் ஒன்றான 22.05. 1972 முதல் அரசற்ற தேச இனமாகவுள்ள ஈழத்தமிழினம் அரசுடன் அரசு என்ற நிலையில் நடைமுறைப்படுத்த இயலாதிருந்தாலும், அமெரிக்காவின் டீல் என்பது உலகின் எந்த நாட்டினதும் மூலவளத்தை மூலதனத்தை மனிதவலுவை தன்னோடு இணைப்பதற்கான தந்திரேபாயம் என்பதை உணர்ந்து ஈழத்தமிழர்களின் தாயக மற்றும் அவர்கள் புலம் பதிந்து வாழும் நாடுகளின் அவர்களது மூலவளம், சமுக மூலதனம் என்பவற்றை வர்த்தக இலாபம் ஈட்டும் மூலதனமாக முதலிடக்கூடிய நிதி வளம் ஈழத்தமிழருக்கு உண்டென்ற நிலையில், இன்றைய உலகச் சந்தைக்குப் பங்களிக்கக் கூடிய ஈழத்தமிழரின் இவைகள் குறித்த அறிவார்ந்த ஆவணங்களை உருவாக்குவதன் மூலம் தனிமனித நிலையிலும் கூட்டாண்மை பங்காண்மை நிலையிலும் உலகின் கோப்ரெட் வர்த்தகத்தில் பங்கேற்பதற்கான வழிகளை உருவாக்கி தங்களதும் தங்கள் தாயகத்தினதும் ஆற்றல்களையும் உற்பத்தித்திறனையும் பொருள்வளத்தையும் அறிவியல் தொழில்நுட்ப நவீனப்படுத்தல் பயிற்சிகளையும் வளர்ப்பதனால் தாயகத்தில் ஈழத்தமிழர்களின் அறியாமை மற்றும் வறுமை நீக்கத்திற்கான பல்வேறு முயற்சிகளை மேற்கொள்ளல் என்பதனை ஈழத்தமிழர்கள் தங்கள் தந்திரோபாயமாகக் கொள்ள வேண்டும். இதன் வழியாகவே அனைத்துலக வர்த்தக மற்றும் தொழில்சார் இணைப்புக்கள் உலக சந்தைப்படுத்தல் இணைப்புக்கள் தாயக மக்களுக்கு கிடைப்பதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்க முடியும். இதுவே உலக மக்களுக்கும் ஈழத்தமிழருக்கும் இடையிலான மக்களுக்கும் மக்களுக்கும் இடையிலான தொடர்பாடல்களை உறவாடல்களை உருவாக்கும் என்பது இலக்கின் இவ்வார எண்ணமாகவுள்ளது.

மேலும் உக்ரேனில் செலன்ஸ்கி தேர்தல் நடத்தாத தந்திரோபாயத்தை தொடர்ந்த வண்ணம் தன்னுடைய தலைமையிலே ஐரோப்பிய ஒன்றியத்தினது குறிப்பாக பிரான்சினது துணையுடனும் பிரித்தானியாவினுடைய நீண்டதூர தாக்குமாற்றல் உடைய ஏவுகணைகள் இணைப்புடனும் ரஸ்யாவின் ஆக்கிரமிப்பை எதிர்த்து ரஸ்யாவுக்கு உள்ளேயே பொருளாதார இலக்குகளை நோக்கி வான்வெளித் தாக்குதல்களை தொடர்கிறார். ரஸ்யா தனது நாட்டின் மீதான உக்ரேனின் தாக்குதலுக்குப் பதிலடி என்ற நியாயப்படுத்தலுடன் உக்ரேனிய மக்களையும் உட்கட்டுமானங்களையும் வான்வெளித் தாக்குதல்களால் தாக்கிக் கொண்டிருக்கிறது. இந்த யுத்தத்தின் விளைவாக ஐரோப்பிய நாடுகள் தங்கள் தங்கள் பாதுகாப்புக்குறித்த இராணுவ பலத்தை வான் கடல் வழி கட்டமைப்பதற்கான அக்கறைகளுடன் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3 முதல் 5 வீதம் வரை பாதுகாப்புக்காகச் செலவிடுவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கின்றன.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3 வீதத்தைப் பாதுகாப்புக்கு ஒதுக்க பிரித்தானியாவின் புதிய பிரதமரும் பச்சைக்கொடி காட்டியுள்ளதுடன் ரஸ்யா, பிரான்சும் பிரித்தானியாவும் நெருப்புடன் விளையாடுவதாகக் கூறியமைக்கு அஞ்சாத நிலையில் பிரித்தானியாவின் உக்ரேனுக்கான ஆயுதபல வழங்கலை உறுதிப்படுத்தியுமுள்ளார். இது ஐரோப்பிய மீள் நட்பாடல் வழியாக பிரித்தானியா தன்னையும் நிலைப்படுத்தி தன் பொருளாதாரத்தையும் பலப்படுத்தும் தந்திரோபாயமாக உள்ளது. பிரான்சிய அரசத்தலைவர் மக்ரோனின் பிரித்தானிய வருகை இந்த பிரித்தானிய தந்திரோபாயத்தை மேலும் பலப்படுத்தும் செயலாக மாறியுள்ளது. உடனடியாக ஐரோப்பிய ஒன்றியத்தில் மீள் அங்கத்துவம் பெறாது விட்டாலும் சுங்கவரி ஒன்றிப்பிலும் ஒற்றைச் சந்தை முறைமையிலும் மீளிணைவுக்கான தந்திரோபாயமாக உள்ளது. இதனை வலியுறுத்தக் கூடிய முறையில் பிரித்தானியப் பிரதமர் அன்டி பேர்ணம் அவர்கள் தான் பிரதமராக வந்து ஆறு வாரத்தின் பின்னர் பிரித்தானிய வெஸ்ட் மினிஸ்ரர் பாராளமன்றத்தில் பிரதமர் என்ற பதவிவழி அதிகாரத்துடன் ஆற்றிய முதலாவது உரையில் மார்கெரெட் தச்சரின் தச்சரிசத்தின் தனியுடமையாக்கலும் பொரிஸ்யோண்சனின் பிரிக்ஸிட் வழியான ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து விலகியதும் பிரித்தானியாவுக்கு எத்தகைய பொருளாதார இழப்புக்களை தோற்றுவித்துள்ளது என்பதனை எடுத்து விளக்கி மீளவும் பொதுமக்கள் கட்டுப்பாட்டை தனியுடமையாக்கப்பட்டவற்றில் கொண்டு வருதலும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் பாதுகாப்பு இணைவு மற்றும் சந்தை இணைவு பல்கலைக்கழகக்கல்வி அறிவியல் தொழில்நுட்ப இணைவுகளுக்கான தடைகளை நீக்குதல் என்பவற்றை தனது தந்திரோபாயங்களாக செயற்படுத்தப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நேரத்தில் பிரித்தானியாவின் எதிர்க்கட்சித்தலைவி கெமி பாட்நொக் அன்டி பேர்ணம் அவர்கள் 1980ம் ஆண்டிலும் 2016ம் ஆண்டிலும் வாழ்வதை விடுத்து இன்றைய காலகட்டத்திற்கு என்ன செய்யலாம் என்பதனைக் குறித்துப் பேசுமாறு கூறியமையையும் பதிவு செய்ய வேண்டும். இது ஈழத்தமிழர்களுக்கும் கடந்த காலத்தில் மட்டும் வாழாது சமகாலத்துக்கு ஏற்ற தந்திரோபாயங்களை தங்களது அமைப்புக்களில் கட்சிகளில் மக்கள் கட்டுப்பாடு பலப்படக்கூடிய வகையில் கட்டமைக்க வேண்டுமென்கின்ற அழைப்பை விடுத்துள்ளது என்பதனை இலக்கு எடுத்துரைக்க விரும்புகிறது.

இந்த உலக தந்திரோபாய மாற்றத்திற்கு ஏற்ப சிறிலங்காவிலும் தங்கள் அதிகாரத்தைத் தக்கவைப்பதிலும் ஆட்சிக்காலத்தை நீடிப்பதற்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தந்திரோபாய முயற்சிகளைச் செய்கின்ற மாதமாகவே 2026 செப்டெம்பர் மாதம் ஆரம்பமாகியுள்ளது. சிறிலங்காவின் அரசியலமைப்பின் 22வது திருத்தம், நாமல் ராஜபக்சாவை ஊழல் விசாரணைக்காக கைது செய்தல் என்பனவற்றுடன் சிறிலங்காவின் அரசியல் நகரத் தொடங்கியுள்ளது.

இதற்கான மற்றொரு முயற்சியாகவே இலங்கையின் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சினால் சிறிலங்காப் பாராளுமன்றத்தில் விவாதத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை பட்டய ஊடக தொழில்வாண்மையாளர்கள் நிறுவனச் சட்டம் அமைகிறது. அதே வேளை ஈழத்தமிழர்களின் இறைமையை ஊடகத்துறை மூலமாகவும் ஒடுக்கும் புதிய தந்திரோபாயம் இது என்கின்ற அச்சம் தாயகத்திலும் அனைத்து உலகிலும் உள்ள ஈழத்தமிழ் ஊடகவியலாளர்களிடை தலைதூக்கியுள்ளது.

இது குறித்து வீரகேசரியில் திரு. க. சிவலிங்கமூர்த்தி அவர்கள் “பட்டய ஊடகவியலாளர் நிறுவனச் சட்டம் - வடகொரியா சீனா போன்ற நகர்வா? ஏன்ற ஆய்வுக்கட்டுரையில இச்சட்டவாக்கச் செயல் “ மனிதனின் சிந்தனை மற்றும் கருத்து வெளிப்பாடானது பிறப்பால் அமைந்த அடிப்படை உரிமையாகும் என்ற கோட்பாட்டுக்கு மாறாக ஒரு அரசாங்கப் பேரவையின் சான்றிதழ் அல்லது பட்டயப் பதிவு மூலமாக மட்டுமே ஊடகவியலையோ அல்லது கருத்து வெளிப்பாட்டையோ முன்னெடுக்க முடியும் என்ற நிலைமையை உருவாக்குவது அரசியல் அமைப்பு உத்தரவாதம் அளிக்கும் மக்கள் இறைமையையும் மக்களுக்கான சுதந்திரத்தையும் சட்டரீதியாகக் குறுக்கும் செயலாகும்” என மிகத்தெளிவாக எடுத்து விளக்கியுள்ளமையை இங்கு மீள்நினைவுபடுத்த இலக்கு விரும்புகிறது.

அவர் தனது கட்டுரையில் “இச்சட்டமூலம் தோற்றுவிக்க முனையும் இலங்கை பட்டய ஊடக தொழில்வாண்மையாளர்கள் நிறுவனத்தின் ஆரம்பக் கட்ட நிருவாகம் உறுப்பினர் சேர்க்கைக்கான அளவுகோல்கள் தொழிற்தகுதி நெறிமுறைகள் மற்றும் தேர்தல் விதிகளைத் தீர்மானித்தலுக்கான முதன்மை அதிகாரத்தைக் கொண்ட இடைக்கால குழவைநியமிக்கும்முழுமையானஆளுமைப்பொறுப்புஅமைச்சருக்கேஅளிக்கப்பட்டுள்ளது.இதன்வழியாகஅமைச்சின் செயலாளர், மற்றும் அமைச்சரால் நேரடியாக நியமிக்கப்படும் பிரதிநிதிகளை கொண்ட இந்த இடைக்காலக்குழுவின் மூலம் அரசின் அரசியல் மற்றும் நிர்வாக அதிகாரங்கள் ஊடகத்துறையின் உள்வாரி இயங்குதளத்துக்குள் நேரடியாக ஊடுருவுவதற்கான சட்டபூர்வ வாயில் அகலத்திறக்கப்படுகிறது. இது சிறிலங்காவின் அரசியலமைப்பின் 14(1) ஏ வழங்கும் ஒவ்வொரு குடியினரதும் பேச்சு எழுத்துச் சுதந்திரத்துக்கான இயற்கை உரிமை, 12(1) உத்தரவாதப்படுத்தும் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்னும் தத்துவம், 3 மற்றும் 4 ஆம் பிரிவுகளில் வரையறுக்கப்பட்டுள்ள உச்சக்கட்ட ஆட்சி அதிகாரம் மக்களிடமே உறைந்துள்ளது என்பனவற்றை வன்முறைப்படுத்துகிறது. மேலும் சட்டத்தின் 4(ஓ) 23 மற்றும் 24 “தொழில்முறைத் தவறான நடத்தை எனக்காரணம் காட்டி ஊடகப் பதிவை தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ இடைநிறுத்த பேரவைக்கு அதிகாரமளிப்பது என்பது அரசஅதிகாரத் தவறுகளை ஊழல்களை புலனாய்வு செய்தியாகவோ கட்டுரையாகவோ வெளியிடும் எந்த ஊடகவியலாளரும் தொழிலிழப்புக்கு ஆளாகும் பேரபாயம் உள்ளது” என்பதையும் எடுத்து விளக்கியுள்ளார்.

இந்நிலையில் தந்திரோபாயங்கள் வழியாக அரசியல் நகர்வுகள் உள்ளமையை புரிந்து கொண்டு தாயகத்தில் தமிழ் ஊடகத்துறையின் சுதந்திரத்தை பேண செப்டெம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபை 2026-27க்கான முதலாவது கூட்டத்தைக் கூட்டுகிற நிலையில் உலகத் தலைவர்கள் அங்கு வருகின்ற சூழ்நிலையில் அவர்களின் கவனத்துக்கு கொண்டு வரவும், செம்மணி இனஅழிப்புக்கான நீதிக்கான உலக மக்களின் ஆதரவைப் பெறவும், வலிந்து காணாமல் ஆக்கத்தைச் செய்தவர்களுக்கான தண்டனை நீதி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் கிட்டிய குடும்பங்களுக்கான பரிகார நீதி ஆகியன கிடைக்கவும் தகுந்த தந்திரோபாய முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும் என்பது இலக்கின் அழைப்பாகவுள்ளது. தியாகி திலீபனின் “மக்கள் போராட்டம் எழ வேண்டும் என்னும் அழைப்பை அவரை நினைவேந்தும் இந்த செப்டெம்பர் மாதத்தில் ஈழத்தமிழ் மக்களின் சனநாயகப்போராட்டமாக முன்னெடுக்கத் தகுந்த தந்திரோபாயங்களை ஈழத்தமிழர்கள் தேசிய ஒருமைப்பாட்டுடன் முன்னெடுக்க வேண்டும் என்பது இலக்கின் பணிவான வேண்டுகோளாக அமைகிறது.

**ஆசிரியர்**




# நீதிக்கான நீண்ட பயணமும் நீர்த்துப்போகும் யதார்த்தங்களும்

## ‘யாழ். சர்வதேச மாநாடு: ஒரு குறுக்குவெட்டு நோக்கு’

விதுரன்

சர்வதேச வலிந்து காணாமலாக்கப்படல்களால் பாதிக்கப்பட்டோருக்கான தினமான கடந்த ஆகஸ்ட் 30 அன்று, ‘நீதிக்கான நீள் பயணம்’ எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கில் நடைபெற்றது.

இந்த சர்வதேச மாநாடானது, ஈழத்தமிழர்களின் தசாப்த கால போராட்ட வரலாற்றில் முக்கிய திருப்புமுனையாகப் பார்க்கப்பட்டாலும், அதன் பின்னணியில் உள்ள அரசியல், சமூக மற்றும் மூலோபாய ரீதியான பலவீனங்கள் கூர்மையான அவதானத்துக்கு உள்ளாகியுள்ளன.



பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் உணர்வுகளையும், சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் பிரசன்னத்தையும் அடிப்படையாகக் கொண்டு நடத்தப்பட்ட இந்நிகழ்வு, உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறலை வலியுறுத்தும் சர்வதேசக் குரலாக வெளிப்பட்டபோதிலும், உள்ளூர் அரசியல் தலைமைகளின் சுயநலப் போக்குகளினாலும், போராட்ட வடிவம் இரு பிரிவுகளாகப் பிளவுபட்டிருந்தமையினாலும் அதன் உண்மையான அரசியல் தாக்கத்தை முழுமையாக அடையத் தவறிவிட்டது.

இந்நிகழ்வின் மிக முக்கியமான நேர்மறையான அம்சம், இதுவரை மாவட்ட ரீதியாகச் சிதறிக்கிடந்த வடக்கு-கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டத்தை ஒரே தளத்தில் ஒருங்கிணைத்து, சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் நேரடிக் கவனத்திற்கு கொண்டு சென்றமையாகும்.

ஐக்கிய நாடுகள் சபையின் வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பான பணிக்குழுவின் உறுப்பினர் அனா லொரெனா டெல்கடில்லோ பேரஸ் மற்றும் சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசியப் பிராந்தியப் பணிப்பாளர் ஸ்மிருதி சிங் ஆகியோரின் நேரடிப் பங்கேற்பு, பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கைகளுக்கு சர்வதேச மட்டத்தில் சட்டபூர்வ அங்கீகாரத்தைப் பெற்றுத்தந்துள்ளது.




குறிப்பாக, ‘உண்மையைத் தெரிந்து கொள்ளாமலேயே பலர் மரணித்துவிட்டனர்; இனிமேல் அந்த உண்மையைத் தெரிந்து கொள்ளாமல் எவரும் மரணிக்கக் கூடாது’ என்று அனா லொரெனா விடுத்த எச்சரிக்கையானது, இலங்கை அரசால் காலங்கடத்தப்படும் நீதிச் செயன்முறைக்கு விழுந்த பலத்த அடியாகும்.

அரச அதிகாரிகளிடம் போதுமான ஆதாரங்கள் இருந்தும் குற்றங்களை மறுதலிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும், செம்மணி உள்ளிட்ட மனிதப் புதைகுழி அகழ்வுகளுக்கு சர்வதேச ஆதரவுடனான முறையான விசாரணைகள் அவசியம் என்றும் அவர்கள் வலியுறுத்தியமை, இலங்கை அரசின் உள்ளகப் பொறிமுறையான ‘காணாமல் போனோர் பற்றிய அலுவலகம்’ முற்றிலும் பயனற்றது என்பதை மீண்டுமொரு முறை நிரூபித்துள்ளது.

இருப்பினும், இந்த மாநாடு பாதிக்கப்பட்ட மக்களின் புனிதமான நீதிக்கான மேடையாக அமைவதற்குப் பதிலாக, தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களின் பிரசன்ன பிரசார மேடையாக மாற்றப்பட்டமை மிகவும் கவலைக்குரிய கட்டமைப்புப் பலவீனமாகும்.



தசாப்த காலமாக வீதியில் நின்று போராடும் தாய்மாரின் வலியை மூலதனமாகக் கொண்டு, தேர்தல் அரசியல் நடத்தும் தமிழ் அரசியல்வாதிகளுக்கு மாநாட்டில் முன்னுரிமை அளிக்கப்பட்டது. சிவஞானம் சிறிதரன், துரைராசா ரவிகரன் போன்ற பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஏனைய கட்சிப் பிரமுகர்களுக்கும் அளிக்கப்பட்ட முக்கியத்துவம், பாதிக்கப்பட்ட மக்களின் உண்மையான குரலையும் சிவில் சமூக அமைப்புகளின் பங்களிப்பையும் ஓரங்கட்டியது.



அதேவேளை, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் குறித்த மாநாடு தொடர்பில் ‘அழைப்பிதழ் கிடைக்க வேண்டும் இல்லாது விட்டால் பங்கேற்க முடியாது’ என்ற தொனிப்பில் விடுத்திருந்த உத்தியோகபூர்வமான அறிவிப்பு, தமிழ் தேசியப் பரப்பில் அது வரலாற்று ரீதியாக வகித்து வந்த ‘தமிழர்களின் தாய்க்கட்சி’ என்ற தகைமையையும் தன்னாதிக்க உரிமையையும் முற்றிலும் இழந்துவிட்டதை வெளிப்படையாகக் காட்டுகின்றது.

பாதிக்கப்பட்ட மக்களின் சர்வதேச நீதிக்கான கோரிக் கையை நேரடியாகவும் வீரியமாகவும் எடுத்துரைக்கத் தவறி, தென்னிலங்கை ஆட்சியாளர்களின் அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்ப நெகிழ்வுப்போக்கைக் கடைப்பிடிக்கும் தமிழரசுக் கட்சியின் அணுகுமுறை, இம்மாநாட்டின் மூலமாக அம்பலப்பட்டுள்ளது.

மேலும், இவ்வளவு முக்கியமானதொரு சர்வதேச தினத்தில், பாதிக்கப்பட்ட மக்களின் போராட்டம் ஒரே தளத்தில் ஒருங்கிணைக்கப்படாமல் யாழ்ப்பாணத்திலும் கிளிநொச்சியிலும் என்று இரு பிரிவுகளாக நடத்தப்பட்டமை போராட்டத்தின் ஒட்டுமொத்தப் பலத்தையும் வீரியத்தையும் கணிசமாகக் குறைத்துள்ளது.



யாழ்ப்பாணத்தில் சர்வதேசப் பிரதிநிதிகளுடன் மாநாடு நடைபெற்ற அதேவேளையில், கிளிநொச்சியில் லீலாதேவி ஆனந்தநடராஜாவின் ஒருங்கிணைப்பில் மற்றொரு கவனயீர்ப்புப் போராட்டமும் நூல் வெளியீடும் தனியாக நடத்தப்பட்டன.

ஒரே கோரிக்கையை முன்னிறுத்திப் போராடும் ஒரு அமைப்பிற்குள் ஏற்பட்ட இத்தகைய பிளவு, பாதிக்கப்பட்ட மக்களின் ஒருங்கிணைந்த குரலை சர்வதேச சமூகத்தின் முன் பலவீனப்படுத்திக் காண்பிப்பதாகவே அமைந்தது. ஒரே நாளில் இரு வேறு இடங்களில் உணர்ச்சிப்பூர்வமாக நிகழ்த்தப்பட்ட இந்த நிகழ்வுகள், அமைப்பிற்குள் இருக்கும் தலைமைத்துவப் போட்டியையும், திட்டமிடலின்மையையும் வெளிச்சம்போட்டுக் காட்டியதுடன், எதிர்த்தரப்பினருக்கு இப்போராட்டத்தைச் சுலபமாக சிதைப்பதற்கான வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.



இதேவேளை, கிளிநொச்சியில் நடைபெற்ற போராட்டத்தில் தென்னிலங்கையைச் சேர்ந்த ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவியான சந்தியா எக்னெலிகொட மற்றும் மனித உரிமைச் செயற்பாட்டாளர் ருக்கி பெர்னாண்டோ ஆகியோர் பங்கேற்றிருந்தமை கூர்ந்து கவனிக்கத்தக்கது.

தென்னிலங்கை மனித உரிமை மீறல்களுக்கு எதிராகத் தொடர்ந்து குரல்கொடுத்து வரும் இவர்கள் தமிழர்களின் போராட்டத்தில் பங்கெடுத்தது ஒருவகையில் நல்லிணக்கத்திற்கான அடையாளமாகக் கருதப்பட்டாலும், இது அரசியல் ரீதியாக ஒரு நுட்பமான சமநிலையை உருவாக்கும் முயற்சியாகவே பார்க்கப்படுகிறது.

அதாவது, வலிந்து காணாமலாக்கப்படுதல் என்பது தமிழினத்திற்கு எதிராக அரசு நடத்திய திட்டமிட்ட

தொடர்ச்சி: பக்கம் 11




பா.அரியநேத்திரன்

காத்தான்குடி, ஏறாவூர் முஸ்லிம் மக்கள் படு கொலைகளுக்கு முன்னும், பின்னும் முஸ்லிம் ஊர்காவல் படை இலங்கை இராணுவத்துடன் இணைந்து மேற்கொண்ட தமிழினப் படுகொலைகள்:

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா ஆட்சிக்காலத்தில் 1990-ல் கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் முஸ்லிம் ஊர்காவல் படையும், இராணுவமும் இணைந்து நடத்திய இனப்படுகொலைகள் எண்ணிலடங்காதவை!

**03/08/1990-ல் (வெள்ளிக்கிழமை இரவு) காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலை.**

**11/08/1990-ல் (சனிக்கிழமை இரவு) ஏறாவூர் முஸ்லிம் மக்கள் மீதான படுகொலை.**

இந்த இரண்டு இடங்களிலும் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட படுகொலைகள் இடம்பெறுவதற்கு முன்னர், முஸ்லிம் ஊர்காவல் படை அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் செய்த தமிழினப் படுகொலை, அழிப்பைப் பாருங்கள்.



19/06/1990-ல் பொத்துவில் பகுதியில் 85 கடை கள் கொள்ளையடிக்கப்பட்டு எரிக்கப்பட்டன. 16 பேர் கொல்லப் பட்டு எரிக்கப்பட்டனர். 21/06/1990 - நீலாவணையில் 25 தமிழர் கள் கொல்லப்பட்டனர். 14 கடைகள் கொள்ளையடிக்கப் பட்டன.
21/06/1990 - கல்முனை நகரில் 36 பலசரக்குக் கடைகளையும் 10 நகைக் கடைகளையும் கொள்ளையடித்துப் பின்பு சேதப்படுத்தினர். 40 தமிழர்கள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டனர். கல்முனை 1ஆம், 2ஆம் குறிச்சியில் 80 தமிழர்கள் படுகொலை.

24/06/1990 - அக்கரைப்பற்றில் 35 தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

25/06/1990 - ஆலையடிவேம்பில் 16 தமிழர்கள் கொல்லப் பட்டனர்.
26/06/1990 - ஆலையடிவேம்பில் படுகொலைகள் - ஆலையடி வேம்பில் வைத்து 5 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

27/06/1990 - வீரமுனையில் 360 வீடுகள் எரிக்கப்பட்டன, 69 தமிழர்கள் கொல்லப்பட்டனர்.



27/06/1990 - மல்வத்தை, மல்லிகைத்தீவு, வளத்தாப்பிட்டி போன்ற கிராமங்கள் முற்றாக அழிக்கப்பட்டன.

27/06/1990 - 4ஆம் காலனி என்ற கிராமம் முற்றாக அழிக்கப் பட்டது, 35 தமிழர்கள் சுடப்பட்டனர்.

28/06/1990 - மீண்டும் அக்கரைப்பற்றில் 10 தமிழர்கள் கொல் லப்பட்டனர்.



29/06/1990 - அம்பாறை வீரச்சோலை 56 தமிழர்கள் படு கொலை.

03/07/1990-20/07/1990 வரை அம்பாறை மாவட்டம் ஆலையடி வேம்பு, திருக்கோயில் பகுதிகள் வரை 103 தமிழர் படுகொலை.

20/06/1990 - கோமாரியில் 03 தமிழ் இளைஞர்கள் கொல்லப் பட்டனர்.

21/06/1990 - 20 தமிழர்கள் சுடப்பட்டனர்.

25/06/1990 - சம்மாந்துறையில் 80 தமிழ்மக்கள் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்டனர்.
27/06/1990 - திருக்கோயில் 25 தமிழர்கள் படுகொலை.

28/06/1990 - அம்பாறை லகுகல காட்டில் அகதிகளாக இருந்த 25 தமிழர்கள்.

30/06/1990 தொடக்கம் 25/07/1990 வரை பொத்துவில், கோமாரி பகுதியில் 75 பேர் வரை கொலை செய்யப்பட்டனர்.

30/06/1990 - சவளக்கடையில் 6 தமிழர்கள் படுகொலை.

01/07/1990 - சம்மாந்துறையில் 52 தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

03/07/1990 - பாண்டிருப்பு சுற்றிவளைக்கப்பட்டு, பாண்டியூரன் உட்பட 65 பொதுமக்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

04/07/1990 - மல்லிகைத்தீவு 12 தமிழர்கள் படுகொலை.

08/07/1990 - 89 தமிழர்கள் நிந்தவூர் முருகன் ஆலயத்தில் வைத்து சுடப்பட்டு, ஆலயத்துள் போட்டு எரிக்கப்பட்டுள்ளனர்.

08/07/1990 - சாகாமப் பகுதியில் 15 வீடுகள் எரிக்கப்பட்டன.

09/07/1990 - கஞ்சிக்குடியாறு, தங்கவேலாயுதபுரத்தில் 10 தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

10/07/1990 - அம்பாறையில் 27 தமிழர்கள் படுகொலை.

28/07/1990 - மீண்டும் கல்முனையையும், பாண்டிருப்பையும் சுற்றிவளைத்து 35 தமிழர்கள் சுட்டுக் கொன்றனர்.

29/07/1990 - சம்மாந்துறை, வீரமுனை பகுதியில் 40 தமிழர்கள் படுகொலை.

28/07/1990 - கோமாரி அகதிகள் முகாமில் இருந்து 18 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

27/07/1990 - மட்டக்களப்பு சித்தாண்டியில் 137 தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

01/08/1990 - சித்தாண்டி 10 தமிழர்கள் படுகொலை.

01/08/1990 - பொத்துவில் அகதி முகாம் சுற்றிவளைக்கப்பட்டு 100 தமிழர்கள் படுகொலை.

02/08/1990 வரை காரைதீவு கிராமத்தில் 108 தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

02/08/1990 - அட்டப்பள்ளத்தில் 05 தமிழர் கொல்லப்பட்டனர்.

06/08/1990 - திராய்க்கேணி 40 தமிழர் படுகொலை.

07/08/1990 - அம்பாறை சேவியர்புரம் 28 தமிழர்கள் படுகொலை.

07/08/1990 - ஏறாவூர் 10 தமிழர் படுகொலை.

08/08/1990 - சவளக்கடை 17 தமிழர்கள் படுகொலை.



1990, யூன், 20-ல் அம்பாறை மாவட்டம் பொத்துவிலில் ஆரம் பித்த இராணுவ நடவடிக்கை மட்டக்களப்பு வாழைச் சேனையில் 1990, யூலை, 30 வரை பிரதான வீதியை அண்டிய நகரப் பகுதி தமிழ் கிராமங்களை இலக்கு வைத்து இளைஞர்களைக் கைது செய்து வீதிகளிலும், சந்திகளிலும்

தொடர்ச்சி: பக்கம் 11




# நீதிக்கான நீண்ட பயணம்... கிளர்ந்தெழுந்த தமிழர் தேசம்

தீபச்செல்வன்

அனைத்துலக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு வடக்கு – கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் பல்வேறு போராட்டங்கள், ஊடக சந்திப்புகள், கவனயீர்ப்பு நிகழ்வுகள் மற்றும் அனைத்துலக மாநாடு ஆகியவற்றை முன்னெடுத்தனர். பல ஆண்டுகளாகத் தொடரும் தமது போராட்டத்தை மீண்டும் சர்வதேசத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்வதுடன், இலங்கையின் உள்நாட்டு பொறிமுறைகள் மீது தமக்கு நம்பிக்கை இல்லை என்பதையும் அவர்கள் இந்த நிகழ்வுகளின் ஊடாக வெளிப்படுத்தினர்.

### நீதிக்கான நீண்ட பயணம்

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற "நீதிக்கான நீண்ட பயணம்" என்ற தொனிப்பொருளிலான அனைத்துலக மாநாடு இந்த நிகழ்வுகளின் மையமாக அமைந்தது. யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெற்ற மாநாட்டில் வடக்கு – கிழக்கைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், அரசியல் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள், சர்வதேச அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு தரப்பினர் கலந்துகொண்டனர்.



மாநாட்டுக்கு முன்னதாக யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திற்கு அருகிலுள்ள 1974ஆம் ஆண்டு உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலை நினைவிடத்திலிருந்து பேரணி முன்னெடுக்கப்பட்டது. காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் புகைப்படங்களை ஏந்தியவாறு குடும்பங்கள் பேரணியில் பங்கேற்றனர். பல ஆண்டுகளாகத் தமது கைகளில் ஏந்திவரும் அதே புகைப்படங்களுடன் அவர்கள் மீண்டும் வீதிக்கு வந்திருந்தமை, இந்தப் போராட்டத்தின் நீடித்த தன்மையை வெளிப்படுத்தியது.

மாநாட்டில் சர்வதேச பிரதிநிதிகளிடம் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமது அனுபவங்களையும் கோரிக்கைகளையும் முன்வைத்தனர். ஐக்கிய நாடுகள் சபையின் வலிந்து அல்லது தன்னிச்சையற்ற காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான செயற்குழுவின் பிரதிநிதிகள் உள்ளிட்ட சர்வதேச தரப்பினர் பங்கேற்றமை, காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தை சர்வதேச மனித உரிமைச் சட்டத்தின் அடிப்படையில் தொடர்ந்து முன்னெடுப்பதற்கான முக்கியத்துவத்தை வெளிப்படுத்தியது.

### நீதியும் பொறுப்புக்கூறலும்

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் பிரதான கோரிக்கை உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறலாகவே தொடர்கிறது. குறிப்பாக இறுதிக்கட்டப் போரின்போது இராணுவத்திடம் கையளிக்கப்பட்டவர்கள், இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டவர்கள் மற்றும் பல்வேறு சந்தர்ப்பங்களில் காணாமல் போனவர்கள் தொடர்பாக அரசாங்கம் தெளிவான பதிலை வழங்க வேண்டும் என குடும்பங்கள் வலியுறுத்துகின்றன.

காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இலங்கை அரசாங்கங்களால் காலத்துக்குக் காலம் பல்வேறு ஆணைக்குழுக்களும் நிறுவனங்களும் அமைக்கப்பட்டுள்ளன. காணாமல் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுக்கள், பரணகம ஆணைக்குழு, காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் உள்ளிட்ட பல்வேறு பொறிமுறைகள் உருவாக்கப்பட்டபோதிலும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு தமது உறவுகளின் நிலை தொடர்பான இறுதியான பதில் கிடைக்கவில்லை என்பதே அவர்களின் தொடர்ச்சியான குற்றச்சாட்டு.



இதனால் உள்நாட்டு விசாரணைகளில் தமக்கு நம்பிக்கை இல்லை எனக் கூறும் குடும்பங்கள், சர்வதேச விசாரணையையும் சர்வதேச நீதிப் பொறிமுறையையும் தொடர்ந்து கோரி வருகின்றனர். தமது போராட்டம் காணாமல் போனவர்களைத் தேடும் குடும்பங்களின் தனிப்பட்ட பிரச்சினை அல்ல என்றும், போர்க்காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான சர்வதேச விவகாரம் என்றும் அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

### தமிழர் தேசமெங்கும் போராட்டம்

அனைத்துலக தினத்தை முன்னிட்டு வடக்கு – கிழக்கின் பல மாவட்டங்களிலும் ஊடக சந்திப்புகள் நடத்தப்பட்டன. மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட பகுதிகளில் இடம்பெற்ற ஊடக சந்திப்புகளில், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமது போராட்டத்தின் தற்போதைய நிலை, எதிர்கொள்ளும் அழுத்தங்கள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக கருத்துகளை வெளியிட்டனர்.

மன்னாரில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில், பல ஆண்டுகளாக முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள், சந்திப்புகள், மனுக்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் எதிர்கொண்ட அனுபவங்களை ஆவணப்படுத்தும் முயற்சிகளும் முன்னெடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. தமது போராட்டத்தின் வரலாறு எதிர்கால சந்ததிக்காகப் பதிவுசெய்யப்பட வேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வை எதிர்த்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டம் ஒன்றையும் முன்னெடுத்தனர். அரசாங்க நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வுகளால் தமது பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காது என்றும், தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்பதற்கான உண்மையான பதிலே முதன்மையானது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

### நீதியமைச்சரின் நீதி

அதைவிடக் கவலைக்குரியது, நீதிக்காகப் போராடும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தமது கோரிக்கையை முன்வைக்கும் இடத்திலேயே அடக்குமுறையை எதிர்கொள்ள வேண்டிய நிலை தொடர்வதாகும். யாழ் மாவட்ட செயலகத்துக்கு வெளியே போராட்டத்தில் ஈடுபட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் தாய்மாரையும் உறவினர்களையும் பொலிஸார் இழுத்துச் சென்று அப்புறப்படுத்திய நிலையில், அந்தக் காட்சிகள் வெளியே நடந்துகொண்டிருந்தபோது நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார மாவட்ட செயலகத்துக்குள் இருந்து தனது கையடக்கத் தொலைபேசியில் அதனைப் பார்த்ததாகக் கூறப்படும் புகைப்படம் சமூக ஊடகங்களில் வெளியாகியது.

நீதிக்காகக் குரல் கொடுக்கும் தாய்மார்களை நேரில் சந்தித்து அவர்களின் கோரிக்கைகளைக் கேட்பதற்குப் பதிலாக, அவர்கள்மீதான பொலிஸ் நடவடிக்கையை உள்ளிருந்து பார்த்துக்கொண்டிருந்த நிகழ்வு காணாமல் போனோர் விடயத்தில் இலங்கை அரசின் போக்கை தெளிவாகக் காட்டுகிறது.

### புலம்பெயர் தேசத்திலிருந்து குரல்

வவுனியாவில் பல ஆண்டுகளாகத் தொடரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டமும் அனைத்துலக தினத்தை முன்னிட்டு கவனத்தைப் பெற்றது. அரசாங்கங்கள் மாறியபோதும் தமது போராட்டம் நிறைவடையவில்லை எனக் கூறிய குடும்பங்கள், பல ஆண்டுகளாக வீதியில் போராடிய பின்னரும் தமது உறவுகளின் நிலை குறித்து உறுதியான பதில் கிடைக்காத நிலையைச் சுட்டிக்காட்டினர்.




இந்தப் போராட்டங்களுடன் இணைந்து புலம்பெயர் தமிழர்களாலும் பல்வேறு நாடுகளில் கவனயீர்ப்பு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. சர்வதேச மனித உரிமை அமைப்புகளிடமும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமது கோரிக்கைகளை தொடர்ந்து முன்வைத்து வருகின்றனர். இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோரின் எண்ணிக்கை தொடர்பாக அரச நிறுவனங்களுக்கும் குடும்ப அமைப்புகளுக்கும் இடையில் வேறுபட்ட தரவுகள் காணப்பட்டாலும், ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இன்னமும் தமது உறவுகளுக்கான பதிலை எதிர்பார்த்து நிற்கின்றனர். பல குடும்பங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பெற்றோர் உயிரிழந்துள்ள நிலையில், அவர்களது பிள்ளைகளும் அடுத்த தலைமுறையும் இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

### சர்வதேச நீதிப்பொறிமுறை வேண்டும்

அனைத்துலக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு இடம்பெற்ற இந்த நிகழ்வுகள், பிரச்சினை இன்னும் முடிவுக்கு வரவில்லை என்பதை மீண்டும் வெளிப்படுத்தியுள்ளன. பல ஆண்டுகளாக தொடரும் போராட்டம் தற்போது உண்மையைத் தேடும் குடும்பங்களின் கோரிக்கையைத் தாண்டி, சர்வதேச

தொடர்ச்சி: பக்கம் 09




மட்டு.நகரான்

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக்காலமாக விபத்துகளும், அதனால் உயிரிழக்கும் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன. குறிப்பாக, இளம் வயதினர் மத்தியில் இந்த விபத்துச் சம்பவங்கள் அதிகளவில் பதிவாகியுள்ளதைக் காண முடிகின்றது.

அண்மையில் வழக்கு ஒன்றிற்காக மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றுக்குச் செல்லும் நிலை ஏற்பட்டிருந்தது. அன்றைய தினம் போக்குவரத்து விதிமீறல்கள் குறித்த பொலிஸாரின் குற்றவியல் சட்டத்தினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டவர்கள், கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையிலும், வழக்குத் தாக்கல் செய்யப்பட்டவர்கள் நீதிமன்றுக்கு அழைக்கப்பட்ட நிலையிலும், அவர்களில் பெரும்பாலானவர்கள் 22 வயதுக்குக் குறைந்தவர்களாகவே இருந்தனர். அதிலும் பெரும்பாலானவர்கள் போதைப்பொருள் பாவனையில் மோட்டார் சைக்கிள்களைச் செலுத்திச் சென்றதாக நீதிமன்றில் பொலிஸாரினால் தெரிவிக்கப்பட்டது.



மட்டக்களப்பு மாவட்டத்தில் மாதம் ஐந்து உயிரிழப்புகள், இந்த வாகனத்தினால் இளம் வயதினர் மரணிக்கும் நிலைமைகள் பதிவாகி வருவதாக பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலைமைக்கு என்ன காரணம் என்பதை நாங்கள் அலசி ஆராய வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

இந்த விபத்துகளில் நாட்டின் எதிர்காலத் தூண்களாகத் திகழ வேண்டிய இளைஞர்கள் பெருமளவில் தங்கள் உயிர்களை இழப்பதும், நிரந்தர ஊனமுறுவதும் ஒட்டுமொத்த சமூகத்தையும் பெரும் துயரத்திற்குள் தள்ளியுள்ளது. இந்த விபத்துகளுக்குப் பின்னால் மனிதத் தவறுகளே முதன்மையான காரணியாக அமைகின்றன.

குறிப்பாக, இளைஞர்களிடையே காணப்படும் போதைப்பாவனை, அதிவேகப் பயணம், தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிள்களைச் செலுத்துதல், வீதி ஒழுங்குகளைப் பின்பற்றாமை மற்றும் வீதிச் சமிக்ஞைகளை மதித்து நடக்காமை போன்றவை விபத்துகள் அதிகரிக்க முக்கியக் காரணங்களாகும். மேலும், மது போதையில் வாகனம் செலுத்துவதும், வாகனம் ஓட்டும் போது கைப்பேசியைப் பயன்படுத்துவதும் ஆபத்தை இரட்டிப்பாக்குகின்றன.

குறிப்பாக, மோட்டார் சைக்கிள்களைப் பயன்படுத்தும் 18 முதல் 30 வயதுக்குட்பட்ட இளைஞர்களே இந்த விபத்துகளில் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். நண்பர்களுடன் வீதிகளில் போட்டி போட்டுக்கொண்டு வாகனம் ஓட்டுதல் மற்றும் சாகசங்களில் ஈடுபடுதல் போன்ற பொறுப்பற்ற செயல்கள், நொடிப்பொழுதில் அவர்களின் உயிரைப் பறித்து விடுகின்றன. இதனால், பல குடும்பங்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து, எதிர்கால நம்பிக்கையைத் தொலைத்து நிற்கின்றன.

அதிகரித்து வரும் வாகனச் செறிவுக்கு ஏற்ப உட்கட்டமைப்பு வசதிகள் போதியளவில் இன்மை, வீதிகளில் போதுமான வெளிச்சமின்மை மற்றும் சட்டங்களை இறுக்கமாக நடைமுறைப்படுத்தத் தவறுதல் போன்ற கட்டமைப்புச் சார்ந்த குறைபாடுகளும் விபத்துகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்கின்றன. குறிப்பாக, பிரதான வீதிகளிலும், சந்திப்புகளிலும் பாதுகாப்பு முறைகள் பலப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகிறது. இளம் வயது மரணங்களைத் தடுக்க உடனடி மற்றும் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் போதைப்பொருள் பயன்பாடும், அதனால் ஏற்படும் வீதி விபத்துகளும், இளம் வயதினரின் எதிர்பாராத மரணங்களும் சமூகத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி வருகின்றன. போதைப்பொருள் கலாசாரம் சமூகத்தின் வேர்களை அரித்து வரும் நிலையில், அது நேரடியாக வீதிப் பாதுகாப்பையும் அச்சுறுத்தி, எதிர்காலத் தூண்களாகத் திகழ வேண்டிய இளைஞர்களைப் பலி எடுத்து வருகின்றது.

போதைப்பொருள் பயன்பாடு ஒரு மனிதனின் மூளைச் செயற்பாட்டையும், சுய நினைவையும், முடிவெடுக்கும் திறனையும் கடுமையாகப் பாதிக்கின்றது. மதுபானம், கஞ்சா மற்றும் ஐஸ் போன்ற நச்சுப் பொருட்களை உட்கொண்டுவிட்டு வாகனம் செலுத்தும் இளைஞர்கள், வீதியின் தன்மையையோ அல்லது தங்களின் வேகத்தையோ சரியாகக் கணிக்கும் திறனை இழக்கின்றனர். இதனால் கட்டுப்பாட்டை இழக்கும் வாகனங்கள், மோதி விபத்துக்குள்ளாகிப் பல உயிர்களை நொடிப்பொழுதில் பறிக்கின்றன.

குறிப்பாக, 18 முதல் 30 வயதுக்குட்பட்ட இளைஞர்களே இத்தகைய ஆபத்தான போதைப் பழக்கத்திற்கும், அதனால் நிகழும் விபத்துகளுக்கும் அதிகமாகப் பலியாகின்றனர். போதையின் உச்சத்தில் கட்டுப்பாடற்ற அதிவேகம், தலைக்கவசம் இன்றி வாகனம் ஓட்டுதல் மற்றும் இரவோடு இரவாக வீதிகளில் ஆபத்தான சாகசங்களில் ஈடுபடுதல் போன்ற பொறுப்பற்ற செயல்கள், பல குடும்பங்களின் ஒரே வாழ்வாதாரமாகவும் நம்பிக்கையாகவும் திகழும் இளைஞர்களின் உயிரைக் குடித்து விடுகின்றன.

போதையினால் ஏற்படும் இந்த விபத்துகள் தனிநபரின் மரணத்தோடு முடிந்து விடுவதில்லை; மாறாக, அது அந்தப் பெற்றோருக்கு ஆறாத் துயரத்தையும், குடும்பத்திற்குப் மீள முடியாத பொருளாதாரப் பின்னடைவையும் தருகின்றது. பலர் உயிருடன் தப்பினாலும், நிரந்தர ஊனமுற்றுத் தன் வாழ்நாள் முழுதும் பிறரில் தங்கி வாழும் பரிதாப நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். போதைப்பொருள் எவ்வாறு ஒரு மனிதனின் வாழ்வைச் சீரழிக்கிறதோ, அதேபோல வீதியில் மற்றவர்களின் பாதுகாப்பையும் கேள்விக்குறியாக்குகின்றது.

இப் பேரழிவைத் தடுக்க அரசாங்கமும் சமூகமும் ஒருங்கிணைந்து உடனடியாகச் செயற்பட வேண்டும். பொலிஸார் வீதிப் பரிசோதனைகளைத் தீவிரப்படுத்தி, போதையில் வாகனம் ஓட்டுபவர்களைக் கண்டறிந்து கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், போதைப்பொருள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதுடன், பாடசாலைகள் மற்றும் கிராம மட்டங்களில் போதைப் பொருள் எதிர்ப்பு மற்றும் வீதிப் பாதுகாப்பு விழிப்புணர்வுகளைத் தொடர்ச்சியாக நடத்த வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எதிர்காலம் அதன் இளைஞர்களின் கைகளில்தான் உள்ளது. 'போதையைத் தவிர்ப்போம்; விபத்தில்லா வீதிகளை உருவாக்குவோம்' என்ற உறுதியோடு ஒவ்வொரு இளைஞனும் பொறுப்புடன் செயற்படும்போது மட்டுமே, இந்த இளவயது மரணங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துப் பாதுகாப்பான சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

போதைப்பொருள் பயன்பாடானது வடகிழக்குப் பகுதிகளில் சமூகச் சீரழிவுக்கும் வழிவகுத்துள்ளது. போதைப்பொருளைப் பெறுவதற்காக இளைஞர்கள் திருட்டு, வழிப்பறி, வன்முறைச் சம்பவங்கள் மற்றும் வீதி விபத்துகள் போன்றவற்றில் ஈடுபடுவது கணிசமாக அதிகரித்துள்ளது. இதனால் குடும்பங்களில் அமைதியின்மை, பொருளாதாரப் பின்னடைவு மற்றும் சமூகக் குற்றங்கள் அதிகரித்து, பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது.

இப் பேரழிவிலிருந்து வடகிழக்கின் இளம் தலைமுறையைக் காப்பாற்ற உடனடி மற்றும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் அவசியமாகும். அரசாங்கமும் பாதுகாப்புத் தரப்பினரும் போதைப்பொருள் கடத்தல் மற்றும் விநியோக நெட்வொர்க்குகளை முற்றாக ஒழிக்கக் கடுமையான சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதேபோல், பாடசாலைகள், சமூக அமைப்புகள் மற்றும் மத நிறுவனங்கள் ஊடாக மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் தொடர்ச்சியான விழிப்புணர்வு வகுப்புகள் நடத்தப்பட வேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் எதிர்காலத் தூண்களாகத் திகழும் இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருள் பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருவது, உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒரு கடுமையான சமூகப் பிரச்சினையாக மாறியுள்ளது. நீண்டகாலப் போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட இப் பிராந்தியங்கள், பொருளாதார ரீதியாகவும் சமூக ரீதியாகவும் மீண்டெழுந்து வரும் இக்கட்டான சூழலில், போதைப்பொருளின் ஊடுருவல் இளைஞர்களின் வாழ்வையும் தமிழர்களின் கலைகலாசாரத்தினையும் முற்றாகச் சீரழித்து வருகின்றது.

போதைக்கு அடிமையான இளைஞர்களைக் குற்றவாளிகளாகப் பார்க்காமல், அவர்களை மீட்டெடுப்பதற்கான முறையான மறுவாழ்வு மையங்கள் வடகிழக்கு மாகாணங்களில் பரவலாக நிறுவப்பட வேண்டும். இளைஞர்களின் ஆற்றலை விளையாட்டு, கலை மற்றும் சுயதொழில் வாய்ப்புகள்பால் திசைதிருப்பி, 'போதையில்லா வடகிழக்கு' என்ற இலக்கை அடைய சமூகத்தின் ஒவ்வொரு நபரும் பொறுப்புடன் கை கோர்க்க வேண்டும்.



போதைப்பொருட்களால் ஏற்படும் உடல், மன மற்றும் சமூகப் பாதிப்புகள் குறித்து நிபுணர்களைக் கொண்டு மாணவர்களுக்குத் தெளிவான விழிப்புணர்வு வழிகாட்டல்களை வழங்க வேண்டும். பாடசாலைக் கலைத்திட்டத்தில் போதைப்பொருள் எதிர்ப்பு மற்றும் வீதிப் பாதுகாப்பு சார்ந்த தகவல்களை உள்ளடக்குவது அவசியமாகும்.

ஒவ்வொரு பாடசாலையிலும் தகுதிவாய்ந்த ஆலோசகர்களை நியமித்து, மன அழுத்தம் மற்றும் தவறான வழிகாட்டுதல்களால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு இரகசியமான முறையில் வழிகாட்டல் மற்றும் உளவியல் ஆதரவு வழங்க வேண்டும்.

மாணவர்களின் ஆற்றலை நல்வழியில் திசை திருப்ப விளையாட்டு, கலை, நாடகம், இலக்கியச் சங்கங்கள் மற்றும் தன்னார்வ இயக்கங்களில் அவர்களை அதிகளவில் ஈடுபடுத்த வேண்டும். இது மாணவர்களின் மன அழுத்தத்தைக் குறைத்து, ஆரோக்கியமான சிந்தனையை வளர்க்கும்.

• • •




இலங்கையின் பொருளாதாரத்தை முற்கொண்டு செல்லும் பிரதான தூண்களில் ஒன்றாகத் திகழும் மலையக பெருந்தோட்ட மக்கள், இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாக இந்நாட்டின் இயற்கை வளங்களையும் தேயிலை ஏற்றுமதி வருமானத்தையும் பெருக்கத் தங்கள் உழைப்பையும் வியர்வையையும் சிந்தி வந்துள்ளனர். நாட்டின் செழிப்பிற்கு இவ்வளவு பெரிய பங்களிப்பைச் செய்த போதிலும், வரலாற்று ரீதியாகத் தமக்கென ஒரு சிறு அளவு காணியோ அல்லது பாதுகாப்பான வீடோ இன்றி, தலைமுறை தலைமுறையாக லயன் அறைகளிலேயே இச்சமூகத்தின் வாழ்வியல் முடங்கிக் கிடக்கிறது. அதில் தற்போது மாற்றத்தை ஏற்படுத்தும் வகையிலான வாக்குறுதிகளை அரசாங்கம் முன்வைத்துள்ளது.



2023 ஆம் ஆண்டில் ஏற்பட்ட மண்சரிவு அனர்த்தத்தினால் வீடுகளை இழந்து சுமார் மூன்றரை ஆண்டு காலம் பாதுகாப்பற்ற சூழலில் தோட்ட தொழிற்சாலையில் வாழ்ந்த பூனாகலை மற்றும் கபரகலை பகுதிகளைச் சேர்ந்த 50 குடும்பங்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட “நவோதயாபுரம்” மாதிரி கிராமத்தை மக்கள் பாவனைக்குக் கையளிக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, மலையக மக்களின் காணி உரிமை மற்றும் அவர்களின் அடிப்படைத் தேவைகளை முழுமையாகப் பூர்த்தி செய்வதற்கான அரசாங்கத்தின் தீர்க்கமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார். மலையக மக்கள் பல தலைமுறைகளாகச் சொந்த நிலமற்றவர்களாகவும், தமக்கென்று ஒரு முகவரி இல்லாதவர்களாகவும் வாழ்ந்த அவல நிலையைச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அவர்களின் காணி உரிமையை சட்டரீதியாக உறுதிப்படுத்துவது தொடர்பில் அரசாங்கத்தின் முக்கியமான திட்டங்களை அறிவித்தார்.

இதன்படி, பெருந்தோட்டக் கம்பனிகளுடனான தற்போதைய குத்தகை ஒப்பந்தங்கள் 2042 ஆம் ஆண்டளவில் நிறைவடையவுள்ளன. இதுகுறித்த விரிவான ஆய்வுகளை மேற்கொள்வதற்காக அமைச்சு மட்டத்தில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டு பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

அதேநேரம் எதிர்காலத்தில் பெருந்தோட்ட நிறுவனங்களுடன் புதிய குத்தகை ஒப்பந்தங்களைச் செய்யும் போது, மலையக மக்களின் காணி மற்றும் வாழ்விட உரிமைகளைப் பாதுகாப்பதற்கான விசேட கட்டுப்பாட்டுப் பிரிவுகள் சட்டரீதியாக அந்த ஒப்பந்தங்களில் கட்டாயமாகச் சேர்க்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார். ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பதுளை மாவட்டத்தின் ஹல்துமுல்லை, பண்டாரவளை மற்றும் ஹப்புத்தளை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளில் வசிக்கும் 163 பயனாளிகளுக்கு காணி உறுதிப் பத்திரங்கள் உத்தியோகபூர்வமாக வழங்கி வைக்கப்பட்டன.

### அடிப்படை உரிமைகளும் “வளமான நாடு - அழகான வாழ்க்கை” கொள்கையும்

இந்நாட்டில் பிறந்து, நாட்டின் பொருளாதாரத்திற்குப் பங்களிப்புச் செய்து, இந்த மண்ணிலேயே உரமாகும் ஒவ்வொரு மனிதனுக்கும் சிறந்த வாழ்க்கையை உரித்தாக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளதாக வலியுறுத்திய ஜனாதிபதி, மலையக மக்களின் வாழ்வியலை உயர்த்த ஐந்து பிரதான அம்சங்களை முன்வைத்துள்ளார்.

இதன்படி, வாழ வசிப்பிடமாக ஒரு பாதுகாப்பான வீடு, நிலையான வருமான வழி, பிள்ளைகளுக்கான உயர்தரக் கல்வி, ஆரோக்கியமான சுகாதார வாழ்க்கை மற்றும் மன அமைதி ஆகிய ஐந்து அடிப்படை உரிமைகளும் ஒவ்வொரு பிரஜைக்கும் பூர்த்தியாக வேண்டும் என்பதை அரசாங்கம் கொள்கையாகக் கொண்டுள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். அத்துடன் “தோட்டத்தில் பிறக்கிறீர்கள், தோட்டத்தில் வேலை செய்கிறீர்கள், தோட்டத்தில் இறக்கிறீர்கள்” என்ற பல தலைமுறைச் சுழற்சியிலிருந்து மலையகச் சமூகம் வெளியேற வேண்டும் என்றும் “அதற்கு கல்வி மட்டுமே ஒரே பிரதான வழி என்பதால், பெருந்தோட்டப் பிராந்திய பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்துவதற்கு விசேட முன்னுரிமை அளிக்கப்படும்” என்றும் ஜனாதிபதி உறுதி அளித்தார்.

நாட்டின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடுகையில் மலையகப் பகுதிகளிலேயே குறைந்த நிறையுடன் குழந்தைகள் பிறப்பது மற்றும் மந்தபோஷணை பாதிப்பு அதிகமாக உள்ளது. இச்சவால்களை எதிர்கொள்ள சிறந்த சுகாதாரக் கட்டமைப்பு வசதிகள் செய்து தரப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். ஜனாதிபதியின் இந்த அறிவிப்புகளில் “மத்திய மலைநாட்டு பாதுகாப்பு அதிகாரசபை” என்ற விடயம் முக்கியத்துவம் பெறுகிறது. எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட தரப்பினர் இந்த அதிகார சபைக்கு எதிர்ப்பை வெளியிடுகின்ற சூழலில் ஜனாதிபதி இதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

நாட்டின் 103 ஆறுகளின் பிறப்பிடமாகவும், 72% மழைவீழ்ச்சியைப் பெறும் வளமாகவும் திகழும் மத்திய மலைநாட்டை அனர்த்தங்களில் இருந்து பாதுகாக்க, பல்வேறு திணைக்களங்களின் அதிகாரங்களை ஒருங்கிணைத்து முழுமையான அதிகாரங்களைக் கொண்ட “மத்திய மலைநாட்டு பாதுகாப்பு அதிகாரசபை” உருவாக்குவதற்கான சட்டமூலம் இவ்வருட இறுதியிலோ அல்லது அடுத்த வருடத் தொடக்கத்திலோ பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார். இதேவேளை இந்த நிகழ்வில் கருத்துரைத்த பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் மலையகத்தில் ஏற்பட்டு வரும் மறுமலர்ச்சி குறித்துப் விளக்கம் அளித்திருந்தார்.

குறிப்பாக அரசாங்கத்தின் ஹட்டன் பிரகடனம் குறித்தும் அவர் மக்களுக்கு விளக்கியிருந்தார். 2024 ஆம் ஆண்டு ஏற்பட்ட அரசியல் மாற்றத்திற்குப் பிறகு, வரலாற்றுச் சிறப்புமிக்க ஹட்டன் பிரகடனத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் வெறும் பேச்சளவில் நிற்காமல் நடைமுறைக்கு வந்துள்ளதாக சுட்டிக்காட்டிய அவர், கடந்த காலத்தில் சம்பள உயர்வுக்குப் போராட்டங்களும் உண்ணாவிரதங்களும் தேவைப்பட்ட நிலையில், தற்போதைய அரசாங்கம் எவ்வித ஆர்ப்பாட்டங்களும் இன்றி மலையக மக்களுக்கான சம்பள உயர்வை வழங்கியுள்ளதாக தெரிவித்தார்.

“தேயிலைத் தோட்டத்தில் பிறந்தோம், அதிலேயே ஆவியை பிரிந்தோம்” என்ற சோகக் கவிதைகளின் வரிகளை மாற்றி, ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் ஆட்சிக் காலத்தில் மலையக மக்களின் லயன் வாழ்க்கை முறை முற்றாகத் துடைத்தெறியப்பட்டு, சொந்தக் காணிக்கான உரிமையுடன் கூடிய தனி வீடுகள் ஒவ்வொன்றாக வழங்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார். இதே வேளை கடந்த நல்லாட்சி காலப்பகுதியிலும் அதற்கு பின்னரும் மலையக தோட்டங்களை சிறு கிராமமாக உருவாக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மருதன் ராம்

அந்த அடிப்படையில் மூன்றரை ஆண்டு காலம் பாதுகாப்பற்ற சூழலில் வாழ்ந்த பூனாகலை மற்றும் கபரகலை பகுதிகளைச் சேர்ந்த 50 குடும்பங்களுக்கான நவோதயாபுரம் வீட்டுத் திட்டம் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும். இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு தவித்த மக்களின் நம்பிக்கையாக உருவாகியுள்ள “நவோதயாபுரம்” மாதிரி கிராமம், மலையக மக்களுக்குக் கௌரவமான வாழ்வை வழங்கும் அரசின் கொள்கைக்குச் சான்றாக அமைகிறது. குறித்த வீட்டுத் திட்டத்தின் கீழ் பயனாளிகள் ஒவ்வொருவருக்கும் தலா 10 பேர்சஸ் காணியுறுதியுடன், 550 சதுர அடி பரப்பளவைக் கொண்ட தனித்தனி வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.



இரண்டு படுக்கையறைகள், வரவேற்பறை, சமையலறை மற்றும் நவீன குளியலறை வசதிகளை உள்ளடக்கிய முழுமையான கட்டுமானமாக இவை திகழ்கின்றன. ஒவ்வொரு வீட்டின் நிர்மாணச் செலவும் சுமார் 32 இலட்சம் ரூபாவாகும். புதிய வீடுகளில் குடியேறும் குடும்பங்களுக்கு உடனடியாகத் தேவைப்படும் தளபாடங்கள் மற்றும் சமையலறை சாதனங்கள் உள்ளிட்ட சுமார் 175,000 ரூபா பெறுமதியான அத்தியாவசிய உபகரணங்களும் அரச செலவில் வழங்கப்பட்டுள்ளன. காணிகளைச் செப்பனிடுதல் முதல் கட்டுமானப் பணிகளை உறுதியாக முடிப்பது வரை இலங்கை இராணுவ பொறியியல் சேவைகள் படையணி சேவையாற்றியுள்ளதுடன் இதனை பாராட்டும் விதமாக ஜனாதிபதியினால் கௌரவ சின்னமும் வழங்கப்பட்டது.

இருநூறு ஆண்டுகளுக்கும் மேலாக ஒதுக்கப்பட்ட சமூகமாக வாழ்ந்த மலையக மக்களை, இந்நாட்டின் பூரண உரிமைகளைக் கொண்ட மாற்றும் முயற்சியை அரசாங்கம் அறிவித்துள்ளதுடன் அதற்கான ஆரம்ப செயல்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றது. காணி உரிமை, பாதுகாப்பான வீடமைப்பு, கல்வி மற்றும் சுகாதார மேம்பாடு ஆகியவற்றின் ஊடாக மலையக மக்களின் லயன் வாழ்க்கை முறையை மாற்றி, அவர்களின் எதிர்காலச் சந்ததியினருக்கு ஒரு பிரகாசமான நாளையப் பொழுதை உறுதிசெய்யும் இந்த நகர்வு, இலங்கையின் சமூக மற்றும் பொருளாதார சமத்துவ வரலாற்றுப் பாதையில் ஒரு முக்கியமான திருப்புமுனையாகும். எவ்வாறாயினும் கடந்த கால அரசாங்கங்களும் இதே போன்ற செயற்பாடுகளை முன்னெடுத்திருந்த போதிலும் அவை முற்றுப்பெறாமல் இடை நடுவே கைவிடப்பட்டன. தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டமும் முழுமையாக நிறைவடையும் பட்சத்திலேயே மலையக மக்களின் வாழ்வியலில் உண்மையான திருப்புமுனை ஏற்படும்.

• • •




கிழக்கு மத்தியதரைக் கடலில் உருவாகி வரும் மூலோபாய போட்டி (Strategic Competition) தற்போது புதிய கட்டத்தை எட்டியுள்ளது. கிரீஸ் மற்றும் இஸ்ரேல் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு வேகமாக விரிவடைந்து வரும் நிலையில், 31.08.2026 அன்று கையெழுத்திடப்பட்ட சுமார் €3 பில்லியன் "Achilles Shield" வான் பாதுகாப்பு கட்டமைப்பு ஒப்பந்தம் (Air-Defence Agreement) முக்கிய பூகோள அரசியல் சார் (geopolitical development) ஆக பார்க்கப்படுகிறது. இது கிரீஸ்-இஸ்ரேல் இருதரப்பு உறவில் மிகப்பெரிய Defence Export Deal ஆகும்.



இந்த ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கம் கிரீஸக்காக ஒருபல்லடுக்கு வான் மற்றும் ஏவுகணை வலையமைப்பினை (Multilayered Air and Missile Defence Network) உருவாக்குவதாகும். இதில் வான்பாதுகாப்பு திறன் (Air-Defence capabilities), ரேடார் கட்டமைப்பு (radar infrastructure), ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டமைப்பு (integrated command-and-control architecture) மற்றும் ட்ரோன் பாதுகாப்பு (counter-drone protection) போன்றவை அடங்குகின்றன. எனவே இது தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை வாங்கும் ஒப்பந்தமாக மட்டுமல்லாமல், கிரீஸின் முழுமையான தேசியவான் பாதுகாப்பு கட்டமைப்பினை (National Air-Defence Architectur) நவீனப்படுத்தும் திட்டமாகும்.

இந்த ஒப்பந்தத்தைப் புரிந்துகொள்ள கீரிஸ்-இஸ்ரேல் (Greece–Israel) Strategic Partnership -ன் நீண்டகால வளர்ச்சியையும் கவனிக்க வேண்டும். கடந்த சில ஆண்டுகளில் இரு நாடுகளும் கூட்டு இராணுவ பயிற்சி(Military Exercises Training), பாதுகாப்பு துறைசார் உற்பத்தி ஒத்துமைப்பு (Defence-Industrial Cooperation) மற்றும் மூலோபாய ரீதியான பாதுகாப்பு பேச்சுவார்த்தை(Strategic Security Dialogue) ஆகியவற்றை விரிவுபடுத்தியுள்ளன. 2025 டிசம்பரில் கீரிஸ்,சைப்பிரஸ் (Cyprus) மற்றும் இஸ்ரேல் (Israel) ஆகியவை 2026-ஆம் ஆண்டுக்கான முத்தரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பினை (Trilateral Military Cooperation) மேலும் வலுப்படுத்த ஒப்புக்கொண்டன.

இந்த ஒப்பந்தத்தின் மிக முக்கியமான பூகோள அரசிய லின் முக்கிய பண்பு(Geopolitical Dimension) துருக்கி (Turkey) ஆகும். சூகிரீஸ் மற்றும் துருக்கி இரண்டும் நேட்டோவின் உறுப்பினர்கள் ஆகும். (NATO Member States). ஆனால் Nயுவுழு உறுப்பினர் நாடுகளாக இருப்பது இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால மூலோபாய ரீதியான முரணினை (Strategic Rivalry) முடிவுக்குக் கொண்டுவரவில்லை. ஏஜியன் கடல் (Aegean Sea), கடல்சார் எல்லைகள் (Maritime Boundaries) வான்வெளி (Airspace), சைப்பிரஸ் (Cyprus) மற்றும் பிராந்திய இறையாண்மை (regional sovereignty) போன்ற பல பிரச்சினைகள் இரு நாடுகளுக்கும் இடையே தொடர்கின்றன.

இதனால் கீரிஸ்-இஸ்ரேல் பாதுகாப்பு கூட்டு ஒத்துழைப்பினை (Greece–Israel Defence Partnership) கீரிஸ்-துருக்கி இடையிலான மூலோபாய போட்டியிலிருந்து (Strategic Competition) முற்றிலும் பிரித்து பார்க்க முடியாது. ஏதேன்ஸ் (Athens )தனது Defence Modernisation தேசிய பாதுகாப்புக்கான தேவையாகக் கருதுகிறது. அதே நேரத்தில் அங்காரா (Ankara) கீரிஸ்,சைப்பிரஸ் (Cyprus) மற்றும் இஸ்ரேல் (Israel) இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பு (security cooperation) அதிகரிப்பதை தனது பிராந்திய மூலோபாய ரீதியான சூழலினை (regional strategic environment)-கவனமாக கண்காணித்து வருகிறது.

18 .08. 2026 அன்று இஸ்ரேல் , வடமேற்கு சிரியாவில் உள்ள Abu al-Duhur இராணுவ விமானதளம் (military airbase) மீது தாக்குதல் நடத்தியது. அங்கு துருக்கியின் இராணுவ நடவடிக்கை (Turkey military deploymen) மேற்கொள்ளப்படலாம் என்று இஸ்ரேல் கூறியது. துருக்கி இந்த தாக்குதலை கண்டித்ததுடன், இஸ்ரேலின்; காரணத்தையும் நிராகரித்தது. எனவே இதுதுருக்கியின் ஈளுகையின் மீது (Turkish territory) நடத்தப்பட்ட தாக்குதல் அல்ல. ஆனால் இந்த சம்பவம் Israel–Turkey Strategic Tension எவ்வாறு சிரியா போன்ற மூன்றாம் தரப்பினுடைய அரங்கிற்குள் (third-country theatre); விரிவடைகிறது என்பதை காட்டுகிறது.



இங்கு ஒரு முக்கியமான நேட்டோ முரண்பாடு (NATO Paradox) உருவாகிறது. துருக்கி மற்றும் கிரிஸ் இரண்டும் ஒரே NATO Alliance -இன் உறுப்பினர்கள். ஆனால் நேட்டோவின் உறுப்புரிமையானது அங்கத்துவ நாடுகளுக்கிடையிலான (member states) இருதரப்பு மூலோபாய போட்டியினை (bilateral strategic competition) முழுமையாக நீக்குவதில்லை. இதனால் இஸ்ரேல் -கீரிஸ் என்பது வெறும் )இருதரப்பு பாதுகாப்பு ஒப்பந்தம் மட்டுமல்ல (bilateral defence agreement) அல்ல. இது கிழக்கு மத்தியதரைக்கடல்(Eastern Mediterranean) கூட்டணிகளுக்கிடையிலான மோதல் (Intra-Alliance Rivalry) மற்றும் அதிகரித்து வருகின்ற பிராந்திய போட்டி(wider regional competition) ஆகியவை எவ்வாறு ஒரே பாதுகாப்பு சூழலில் (security environment) இணைந்து செயல்படுகின்றன என்பதற்கான உதாரணமாகும்.

இந்த ஒப்பந்தத்தை நேரடியாக துருக்கிக்கு எதிரானது (Anti-Turkish Alliance) என்று குறிப்பிடுவது மிகைப்படுத்தலாகும். கீரீஸ் தனது பாதுகாப்பு துறைசார் அறிக்கையில் (official security rationale) வான் பாதுகாப்பு (aerial threats) ஏவுகணை அச்சுறுத்தல் (missile threats) ட்ரோன் (drones) மற்றும் hybrid-security challenges போன்ற பல்வேறு அச்சுறுத்தல்களினை எதிர்கொள்ள பாதுகாப்பு கட்டமைப்பினை நவீனமயதாக்குதல் (Defence Modernisation) தேவைப்படுவதாகக் கூறுகிறது.

ஆனால் துருக்கியின் இராணுவ திறன் (military capabilities) மற்றும் கீரீஸ் உடனான முரண்பாடு ஆகியவை ஏதேன்ஸின் (Athens) மூலோபாய கணிப்புக்களில் (strategic calculations) முக்கியமான காரணிகளாக உள்ளன என்பதை மறுக்க முடியாது.

மேலும் இஸ்ரேலுக்கும் இதில் மூலோபாய ரீதியாக பலன் (strategic value) உள்ளது. நேட்டோ உறுப்பினரான கீரீஸ் உடனான நெருக்கமான பாதுகாப்பு துறைசார் உறவின் (security relationship) மூலம் இஸ்ரேல் , ஜரோப்பா மத்திய கிழக்கு மற்றும் கிழக்கு மத்தியதரைக்கடல் (Eastern Mediterranean) ஆகிய மூன்று மூலோபாய பெறுமதிசார் பகுதிகளினை (strategic spaces) சந்திக்கும் முக்கியமான புவியியல் சார் இருப்பிடத்தினை (geographical position) மேலும் வலுப்படுத்துகிறது.இந்த ஒப்பந்தம் தனிமைப்படுத்தப்பட்ட அபிவிருத்தியல்ல . 2026 ஆவணியில் துருக்கி சவுதி அரேபியா மற்றும் பாகிஸ்தான் ஆகியவை Mecca Joint Defence Agreement -ஐ உருவாக்கியுள்ளன. அதே நேரத்தில் துருக்கி தனது நேட்டோ அங்கத்துவத்தினையும் தொடர்கிறது.

A.M.L லம்பேட்



இதனால் மத்திய கிழக்கு (Middle East) மற்றும் சிழக்கு மத்தியதரைக்கடல் (Eastern Mediterranean) பகுதியில் ஒரு புதிய வலைப்பின்னலான பாதுகாப்பு கட்டமைப்பு (Networked Security Architecture) உருவாகி வருகிறது. ஒரே பெரிய கூட்டினை மையமாகக் கொண்ட பாதுகாப்பு கட்டமைப்புக்கு (security system) பதிலாக பல நாடுகள் இருதரப் (bilateral) மற்றும் முத்தரப்பு பாதுகாப்பு ஒப்பந்தங்களின் மூலம் (trilateral defence partnerships) மூலம் தங்களது வியூக தடுப்பினை (Strategic Deterrence) அதிகரிக்க முயற்சிக்கின்றன.

எனவே கீரிஸ்- இஸ்ரேல் இடையேயான "Achilles Shield" ஒப்பந்தம் ஒரு பாதுகாப்பு துறை கொள்முதல் ஒப்பந்தம் என்பதை விட (defence procurement deal) விட அதிகமான புவிசார் அரசியல் முக்கியத்துவத்தினை (geopolitical significance) கொண்டுள்ளது. இது புலனாய்வு ஒத்தழைப்பு (intelligence Cooperation), கூட்டு இராணுவ பயிற்சி (Military Exercises), Defence Technology, கடல்பாதுகாப்பு (Maritime Security) மற்றும் மூலோபாய தடுப்பு (Strategic Deterrence) ஆகிய துறைகளில் மேலும் விரிவடையக்கூடிய ஒத்துழைப்பிற்கு அடித்தளமாக அமையலாம்.

• • •

## நீதிக்கான நீண்ட ... தொடர்ச்சி...

நீதிப் பொறிமுறைக்கான அரசியல் மற்றும் சட்டரீதியான கோரிக்கையாகவும் வலுப்பெற்றுள்ளது.

வடக்கு – கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம் ஒரு நாளில் முடிகிற விடயமல்ல. அவர்கள் தொடர்ந்து வலியுறுத்துவது ஒன்றே — காணாமல் போனவர்களின் நிலை தொடர்பாக உண்மை வெளிப்படுத்தப் பட வேண்டும். அதற்குப் பொறுப்பானவர்கள் அடையாளம் காணப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். அதனை சர்வதேச விசாரணை வழியாக நம்பாக செய்ய வேண்டும். இக் கோரிக்கைளுடன் எம் உறவுகளின் "நீதிக்கான நீண்ட பயணம்" இன்னும் தொடர்கிறது. இதற்கு ஸ்ரீலங்கா அரசின் பதில்தான் என்ன?

• • •




தமிழில்: **ஆர்த்திகன்**

தனது இரண்டாவது பதவிக்காலத்தின் தொடக்கத்திலேயே, 'அமெரிக்காவின் மகத்துவத்தைப் போற்றும் பெயர்களை மீட்டெடுத்தல்' (Restoring Names That Honor American Greatness) என்ற நிர்வாக உத்தரவில் டிரம்ப் கையெழுத்திட்டார். அதன்படி, மெக்சிகோ வளைகுடாவை (Gulf of Mexico) இனி 'அமெரிக்கா வளைகுடா' (Gulf of America) என்று அழைக்குமாறு கூட்டாட்சி முகமைகளுக்கு அவர் உத்தரவிட்டார்.




### என்னது? அது எப்படிச் சாத்தியம்?

அது அதோடு நிற்கவில்லை. ஆகஸ்ட் 27, 2026 அன்று, ஒன்ராறியோ ஏரியின் (Lake Ontario) அமெரிக்கப் பகுதிக்கு 'அமெரிக்கா ஏரி' (Lake America) என்று அதிகாரப்பூர்வமாகப் பெயர் மாற்றும் மற்றொரு நிர்வாக உத்தரவில் டிரம்ப் கையெழுத்திட்டார்.



அதெல்லாம் என்ன விபரீதம்? இந்த பைத்தியக் காரத்தனத்தின் அளவைப் பார்த்து நான் இன்னும் அதிர்ச்சியில் உறைந்து போயிருக்கிறேன்.

சமீபத்தில் டிரம்ப் இப்படி எழுதினார்: "அந்த நீரிணை இப்போது அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் இருப்பதால், ஹார்முஸ் நீரிணையின் (Strait of Hormuz) பெயரை 'டிரம்ப் நீரிணை' (STRAIT OF TRUMP) என்று மாற்றலாமா??? அமெரிக்காவைப் போலவே, அதுவும் முன்னெப்போதையும் விட 'சூடாக' (hotter) இருக்கும்!"

சிறிது நேரத்திற்குப் பிறகு, வெள்ளை மாளிகையின் அதிகாரப்பூர்வ கணக்கு அந்தப் பதிவை ஆதரிக்கும் வகையில், புதிய பெயருடன் கூடிய வரைபடம் மற்றும் "இது கேட்பதற்கு நன்றாக இருக்கிறது" (It has a nice ring to it) என்ற வாசகத்தைப் பகிர்ந்து கொண்டது.

இந்த நிர்வாகத்தில் பகுத்தறிவு எங்கே இருக்கிறது? அமெரிக்க வரலாற்றின் வேறு எந்தக் காலகட்டத்திலும் இது போன்ற ஒரு பைத்தியக்காரத்தனம் சாத்தியம் என்று எந்தவொரு சிந்தனையாளரும் நம்பியிருக்க மாட்டார்கள்.

எதிர்வினைகளைத் திசைதிருப்ப எடுக்கப்பட்ட துணிச்சலான நடவடிக்கையாக இது இருக்குமோ? சில சமயங்களில் பென்டகன் (அமெரிக்கப் பாதுகாப்புத் துறை) குறிப்பிட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதுண்டு, ஆனால் இங்கே அப்படி எதுவும் நடக்கவில்லை. உண்மையில் இங்கே ஒரு மனநலம் சார்ந்த சிக்கலே நிலவுகிறது.

இதை இன்னும் தெளிவாகச் சொல்லவேண்டுமென் றால்: உயிருடன் இருக்கும் ஒருவரின் முகத்தை நாட்டின் புழக்கத்தில் உள்ள நாணயங்களில் அச்சிடக்கூடாது என்பது அமெரிக்கக் கூட்டாட்சிச் சட்டத்தின் நீண்டகால விதியாக இருந்து வருகிறது.



அப்படியிருக்க, தனது சுயமோக வெளிப்பாடுகளில் ஒன்றாக டிரம்ப் என்ன செய்தார்? தனது முதல் பதவிக் காலத்தில் கையெழுத்திடப்பட்ட சட்டத்தில் இருந்த ஒரு ஓட்டையைப் பயன்படுத்தி அவரது நிர்வாகம் அந்தச் சட்டத்திற்குப் புதிய விளக்கம் அளித்தது. நாணயம் தயாரிக்கும் பிரிவின் (Mint) சட்ட விளக்கப்படி, அந்தத் தடை நாணயத்தின் பின்புறத்திற்கு மட்டுமே பொருந்தும் என்றும், எனவே



முன்புறத்தில் டிரம்பின் முகத்தை அச்சிடலாம் என்றும் அவர்கள் வாதிட்டனர்.

இந்தத் தந்திரம் எனக்கு இன்னும் முழுமையாகப் புரியவில்லை; ஏனென்றால் உலகம் முழுவதும் நாணயத்தின் முன்புறத்தில் முகங்களும், பின்புறத்தில் எண்கள் மற்றும் மதிப்புகளும் (denominations) இடம்பெறுவது வழக்கம். அந்தப் பைத்தியக்காரர் அதைக் கூட மாற்றிவிட்டாரா? இது எனக்குள் ஒரு விசித்திரமான நடுக்கத்தை ஏற்படுத்துகிறது.



வெனிசுலாவை ஆக்கிரமித்து அங்கு ஆட்சிக் கவிழ்ப்பை நடத்திய பிறகு, அதை அமெரிக்காவின் 51-வது மாநிலமாகக் காட்டும் வரைபடங்களை அவர் வெளியிட்டதைப் பற்றி யெல்லாம் நாம் பேசவே இல்லை.

ஆனால், இதையெல்லாம் பற்றி அமெரிக்கர்கள் உண்மையில் என்ன நினைக்கிறார்கள்? இத்தகைய மன நிலை நிலவும் சூழலில், ஆரம்பத்திலிருந்தே புள்ளிவி வரங்களையும் உண்மைகளையும் திரித்துக்கூறிய ட்ரம்ப் ஈடுபட்ட ஒரு போரிலிருந்து எத்தகைய விளைவைத்தான் எதிர்பார்க்க முடியும்?

அடுத்ததாகப் பதவியேற்கவிருக்கும் அதிபர் (அவர் ஜனநாயகக் கட்சியினரோ அல்லது குடியரசுக் கட்சியினரோ யாராக இருந்தாலும்), குறுகிய மற்றும் நீண்ட கால அடிப்படையில் எத்தகைய புவிசார் அரசியல் பாதிப்புகளைச் சரிசெய்ய வேண்டியிருக்கும்?

ட்ரம்ப் காலத்திற்குப் பிந்தைய காலகட்டத்தில், உலகப் பாதுகாப்பிற்கான அமெரிக்க மாதிரியை மீண்டும் மீட்டெடுப்பதற்கான வாய்ப்பு இன்னும் இருக்கிறதா?

**பாற்றிசியா மரின்ஸ்**
**படைத்துறை ஆய்வாளர்**

• • •

## காத்தான்குடி படுகொலை... தொடர்ச்சி...

சுட்டு, தீயிட்டு எரித்தனர். இதில் பொத்துவில், கோமாரி, திருக்கோயில், தம்பிலுவில், விநாயகபுரம், அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, காரைதீவு, கல்முனை, பாண்டிருப்பு, பெரியநீலாவணை, கல்லாறு, கோட்டைக்கல்லாறு, ஒந்தாச்சிமடம், களுவாஞ்சிகுடி, களுதாவளை, தேற்றாத்தீவு, மாங்காடு, செட்டிபாளயம், குருக்கள்மடம், கிரான்குளம், தாழங்குடா, ஆரையம்பதி, நாவற்குடா, கல்லடி, பிள்ளையாரடி, சத்துருக்கொண்டான், தன்னாமுனை, மயிலம்பாவெளி, ஆறுமுகத்தான்குடியிருப்பு, ஏறாவூர், செங்கலடி, கொம்மாதுறை, வந்தாறுமூலை, சித்தாண்டி, சந்திவெளி, முறக்கட்டான்சேனை, கிரான், கிண்ணயடி, வாழைச்சேனை வரையும் பிரதான வீதி இருமருங்கிலும் உள்ள வீடுகளில் இருந்த இளைஞர்களைப் பிடித்து அதே வீதிகளில் போட்டு தீயிட்டு எரித்துக்கொண்டே இந்தப் படை நடவடிக்கை தொடர்ந்தது. 200 தமிழர்கள் படுகொலை.

(1990, யூன், 20 தொடக்கம் 1990, யூலை, 30 வரை அம்பாறை மாவட்டத்தில் திருக்கோயில் தொடக்கம் மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனை வரை உள்ள கிராமத்து தமிழ் இளைஞர்கள் அச்சத்தால் இடம்பெயர்ந்து, மட்டக்களப்பு மாவட்டம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான படுவான்கரைப் பெருநிலப் பகுதிகளில் உள்ள கிராமங்களில் உறவினர் வீடுகளில் தஞ்சம் அடைந்தனர்.)

19/06/1990 தொடக்கம் 08/08/1990 வரை இரண்டு மாதங்களுக்குள் 40 தமிழ் கிராமங்களில் 1805 தமிழர்கள் முஸ்லிம் ஊர்காவல் படை, இராணுவம் இணைந்து தமிழினப் படுகொலை அரங்கேறியது.

இதற்குப் பின்னரே காத்தான்குடி, ஏறாவூர் முஸ்லிம் மக்கள் படுகொலை நடந்தது.

03/08/1990-ல் (வெள்ளிக்கிழமை இரவு) காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலை.

11/08/1990-ல் (சனிக்கிழமை இரவு) ஏறாவூர் முஸ்லிம் மக்கள் மீதான படுகொலை.

இந்த இரண்டு முஸ்லிம் படுகொலைகள் நடந்த பின்னர்...

மீண்டும் முஸ்லிம் ஊர்காவல் படை இராணுவத்துடன் சேர்ந்து செய்த தமிழினப் படுகொலைகள்:

12/08/1990 - வீரமுனைப் படுகொலை 233 தமிழர்கள் படுகொலை.

12/08/1990 - துறைநீலாவணை 60 தமிழர்கள் படுகொலை.

12/08/1990 - ஏறாவூர் வைத்தியசாலை 10 தமிழர்கள் படுகொலை.

12/08/1990 - கரடியனாறு சோனகன்வெட்டை - 04 தமிழர் படுகொலை.

14/08/1990 - கோராவெளி, ஈச்சையடி 18 தமிழர்கள் படுகொலை.

05/09/1990 - வந்தாறுமூலை பல்கலைக்கழகத்தில் தஞ்சமடைந்த 158 தமிழர்கள் படுகொலை.

09/09/1990 - சத்துருக்கொண்டான் 184 தமிழர்கள் படுகொலை.

10/09/1990 - நற்பிட்டிமுனை 23 தமிழர்கள் படுகொலை.
10/09/1990 - ஏறாவூர் தமிழ் கிராமம் 08 தமிழர்கள் படுகொலை.

21/09/1990 - மட்டக்களப்பு புதுக்குடியிருப்பு 17 தமிழர்கள் படுகொலை.

09/06/1991 - வந்தாறுமூலை 25 தமிழர்கள் படுகொலை.

12/06/1991 - மகிழடித்தீவு 152 தமிழர்கள் படுகொலை.

12/07/1991 - கிண்ணையடி 13 தமிழர்கள் படுகொலை.

29/04/1992 - மட்டக்களப்பு எல்லை முத்துக்கல் கிராமத்தில் 97 தமிழர் படுகொலை.

09/08/1992 - மட்டக்களப்பு மயிலந்தனை 50 தமிழர்கள் படுகொலை.

13/08/1990 தொடக்கம் 09/08/1992 வரை 12 தமிழரின் இடங்களில் 1052 தமிழர்கள் முஸ்லிம் ஊர்காவல் படையாலும், இராணுவத்தாலும் படுகொலை செய்யப்பட்டனர்.

மொத்தமாக ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் ஆர். பிரேமதாசா இலங்கையின் 03-வது ஜனாதிபதியாக 1989 ஜனவரி 02 தொடக்கம் 1993, மே, 01 வரை பதவியில் இருந்த காலத்தில் 1990-ல் முஸ்லிம் ஊர்காவல் படையினருக்கு ஆயுதங்களும், விசேட பயிற்சிகளையும் வழங்கி இராணுவத்துடன் இணைந்து அம்பாறை, மட்டக்களப்பு இரண்டு மாவட்டங்களிலும் தமிழினப் படுகொலைகளுக்குக் கட்டளை இட்டதன் விளைவாக, பிட்டும் தேங்காய்ப் பூவுக்கும் உவமை கூறி ஒற்றுமையாக வாழ்ந்த இரண்டு இனங்களும் கீரியும், பாம்புமாக ஆர். பிரேமதாசா மாற்றினார்.

19/06/1990 தொடக்கம் 09/08/1992 வரை இரண்டு கட்டங்களாக முஸ்லிம் ஊர்காவல் படையினர் இராணுவத்துடன் இணைந்து மொத்தமாக (1805+1052=2857) 2857 அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இது ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் ஆட்சிக் காலத்தில் மட்டும் மட்டக்களப்பு, அம்பாறையில் நடந்த படுகொலைகள் மட்டுமே.

1990-க்கு முன்னர் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் பல படுகொலைகள், முக்கியமாக 19/02/1986-ல் அம்பாறை உடும்பன்குளம் படுகொலை, 28/01/1987-ல் கொக்கட்டிச்சோலை படுகொலை மற்றும் வடகிழக்கில் இடம்பெற்ற படுகொலைகள் இதில் இணைக்கவில்லை.

ஏனெனில், ஆர். பிரேமதாசா முஸ்லிம் ஊர்காவல் படையை உருவாக்கி நடத்திய திட்டமிட்ட படுகொலைகள் 1990, 1991 ஆண்டுகளில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இடம்பெற்றது. சில முஸ்லிம் ஆய்வாளர்கள், அரசியல்வாதிகள் காத்தான்குடி, ஏறாவூர், முஸ்லிம் மக்களின் படுகொலைகளுக்குப் பின்னரே வீரமுனைப் படுகொலை நடந்ததாக கூறுவது தவறு.

1990, அக்டோபர், 30-ல் யாழ். குடாநாட்டில் இருந்து முஸ்லிம் மக்கள் பாதுகாப்பாக வெளியேற்றியதன் பின்னணியும், கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் ஏற்பட்ட பிரச்சனைகள் வடக்கிலும் எழக்கூடாது என்பதற்காகவே இந்த வெளியேற்றம் இடம்பெற்றது. இதனை சிலர் இனச் சுத்திகரிப்பு என வியாக்கியானம் பேசுகின்றனர். உண்மையில் அது இனச் சுத்திகரிப்பு இல்லை, இனப் பாதுகாப்பு நடவடிக்கை என்பதே உண்மை.

கிழக்கு மாகாணத்தில் மட்டுமே முஸ்லிம் ஊர்காவல் படையினர் இராணுவத்துடன் இணைந்து இனப் படுகொலை புரிந்தனர் என்பதே வரலாறு.

• • •

## அமெரிக்க கடல்சார் ... தொடர்ச்சி...

நோக்கில் இந்த விஜயம் இடம்பெறவுள்ளது.

விஜயத்தின்போது இலங்கை அரசாங்கம் மற்றும் கடல்சார் துறையின் சிரேஷ்ட அதிகாரிகளை அவர்கள் சந்திக்கவுள்ளனர். மேலும், 8ஆவது கொழும்பு சர்வதேச கடல்சார் மாநாட்டில் லோரா டிபெல்லா உரையாற்றவுள்ளதுடன், ரொபர்ட் ஜே. ஹார்வி குழு கலந்துரையாடல் ஒன்றில் பங்கேற்கவுள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் எரிக் மேயர், இந்தியப் பெருங்கடல் வழியான கப்பல் போக்குவரத்தில் இலங்கை முக்கிய பங்கு வகிப்பதாகத் தெரிவித்துள்ளார். பாதுகாப்பானதும் வினைத்திறனானதுமான கப்பல் போக்குவரத்து அமெரிக்க வர்த்தகங்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்குவதுடன், இந்தோ-பசுபிக் பிராந்தியத்தின் முக்கிய வர்த்தக மையமாக இலங்கை யின் நிலையை மேலும் வலுப்படுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வடக்கு – கிழக்கில் ... தொடர்ச்சி...

- மாதவனை பாரம்பரிய மேய்ச்சல் நிலங்களில் குடியேற்றங்களை உருவாக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

மேலும், இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள காணிகளை விடுவித்தல், மகாவலி திட்டம், வன மற்றும் வனவிலங்கு திணைக்களங்களின் எல்லை நிர்ணயம், தொல்பொருள் திணைக்கள நடவடிக்கைகள் உள்ளிட்ட காணி பிரச்சினைகளுக்கும் தீர்வு தேவை என வலியுறுத்தினார்.

அத்துடன், மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துதல், தமிழ் மக்களின் அரசியல் மற்றும் சுயநிர்ணய உரிமைகளை உறுதிப்படுத்துதல், தமிழ் கட்சிகளின் அரசியல் ஒத்துழைப்பு மற்றும் சர்வதேச சமூகத்தின் தொடர்ச்சியான கவனம் ஆகியவற்றின் அவசியத்தையும் அவர் எடுத்துரைத்தார்.

## பிரிட்டன் ஒரு “பெரும் ... தொடர்ச்சி...

ஆக உள்ளது; மேலும் லண்டன் இந்த ஆண்டில் மட்டும் கூடுதலாக 252 பில்லியன் பவுண்டுகளைக் கடனாகப் பெறத் திட்டமிட்டுள்ளது. நாட்டின் நிதி நிலைத்தன்மை மீதான நம்பிக்கையைச் சந்தைகள் இழந்து வட்டி விகிதங்களை மேலும் உயர்த்தியிருப்பது நிலைமையை இன்னும் மோசமாக்கியுள்ளது.

“'மிதவாதத் தலைவர்கள்' (moderate fathers) கூட இப்போது ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும்: 'நல்ல பழைய நாட்களுக்கு' திரும்புவதற்கு முந்தைய ஒரு தற்காலிகச் சிரமம் மட்டுமல்ல இந்தத் தேக்கநிலை-பணவீக்கம் (stagflation). பெரும்பாலான மேற்கத்திய பொருளாதாரங்களும் நலவாழ்வு அரசுகளும் (welfare states) இக்கட்டான நிலையில் உள்ளன; அவற்றின் தொழில்துறைகள் போட்டியிட முடியாத நிலையில் உள்ளன; மக்கள் அந்நியப்பட்டு அதிருப்தியில் உள்ளனர்; மேலும் நிறுவனங்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளைச் சரியாகச் செய்யத் தவறி வருகின்றன,” என்று ஆசிரியர் தனது கட்டுரையை நிறைவு செய்துள்ளார்.

## நேபாளத்தில் மீட்புப் ... தொடர்ச்சி...

சில இடங்களில் தரைக்கு மேலே இப்போது இல்லாத உள்கட்டமைப்புகளின், கூட்டாகத் திரட்டப்பட்ட ஒரு நேரடி வரைபடமாக இது மாறியுள்ளது. மேலும், அவர்களுக்குக் கிடைக்கும் ஒவ்வொரு துப்பும் தேவைப்படுகிறது.

1,200-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர், 4,000-க்கும் மேற்பட்டோர் இன்னும் காணா மல் போயுள்ளனர். அவர்களில் சிலர், 22 லட்சம் டன் சேறு மற்றும் இடிபாடுகளுக்கு அடியில் புதைந்துள்ள சுரங்கங்களுக்குள் சிக்கியிருக்கக்கூடும்.

வாட்ஸ்அப் ஒரு அதிநவீன தொழில்நுட்பமாக இல்லாமல் இருக்கலாம், ஆனால் தற்போதைக்கு அது மீட்புப் பணியாளர்கள் உள்ளே செல்வதற்கான வழியைக் கண்டறிய உதவுகிறது.

## செங்கடல் கடற்கரைப்... தொடர்ச்சி...

ராணுவ அதிகாரிகள் மற்றும் மருத்துவத் தரவுகளின் அடிப்படையில் வெளியிடப்பட்ட தகவலாகும்.

செங்கடல் கடற்கரைப் பகுதியில் உள்ள ஒரு ராணுவ அதிகாரி தனது தரப்பில் 24 பேர் கொல்லப்பட்டதாகத் தெரிவித்தார்; அதேவேளையில் தைஸ் நகரின் உட்புறப் பகுதியில் இருந்த மற்றொரு அதிகாரி அங்கு 15 பேர் கொல்லப்பட்டதாகக் கூறினார்.

ஹூதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் உள்ள மருத்துவத் தரவுகளின்படி, குறைந்தது 42 ஹூதி போராளிகளும் கொல்லப்பட்டதாக ஏஃப்பி செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

## வலி வடக்குக் காணி ... தொடர்ச்சி...

வந்து, எதிர்வரும் வாரத்துடன் இரண்டு வருடங்கள் பூர்த்தியாகின்றன. புதிய அரசாங்கத்தின் மீது தமிழ் மக்கள், குறிப்பாக வலி வடக்கு காணிகளை இழந்த மக்கள் நம்பிக்கை வைத்தபோதும், தற்போது நம்பிக்கை இழந்தவர்களாகக் காணப்படுகின்றனர் என்றார்.

## விடை தெரியாத... தொடர்ச்சி...

இனப்படுகொலையின் ஒரு அங்கம் என்பதை நீர்த்துப்போகச் செய்து, அது 'ஜே.வி.பி. கிளர்ச்சிக் காலங்களிலும் தெற்கில் நடந்த பொதுவான மனித உரிமை மீறல்' என்ற தளத்திற்குள் கொண்டுவந்து சமநிலைப்படுத்தும் மேற்குலக புவிசார் அரசியல் நோக்கத்தை முழுமையாக பிரதிபலிக்கிறது.

தென்னிலங்கையில் நடந்த காணாமலாக்கப் படல்களும் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட கட்டமைக்கப்பட்ட பேரழிவும் ஒரே நேர்கோட்டில் வைத்துப் பார்க்கப்பட முடியாது என்ற வரலாற்று யதார்த்தத்தை இத்தகைய பங்கேற்புகள் மழுங்கடிக்கச் செய்கின்றன.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில், யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இந்த சர்வதேச மாநாடு, காணாமலாக்கப்பட்டவர்களின் பாவனைப் பொருட்கள், புகைப்படங்கள் அடங்கிய சாட்சியக் கண்காட்சி மற்றும் நூல்கள் வெளியீடு என்று வரலாற்றுப் பதிவுகளின் வழியே சர்வதேச கவனத்தை ஈர்த்திருந்தாலும், மாநாட்டிற்குப் பிந்தைய முறையான செயற்றிட்டம் எதுவும் முன்வைக்கப்படாமை பெருங்குறையாகும்.

பாதிக்கப்பட்ட தாய்மார்கள் வயது முதிர்வாலும் நோயினாலும் காலப்போக்கில் மரணித்து வரும் சூழலில், அடுத்த பத்தாண்டுகளில் இப்போராட்டம் வெறும் அடையாளப் போராட்டமாக மாறிவிடும் அபாயம் நிலவுகிறது.

ஆகவே, அரசியல்வாதிகளின் விளம்பர மேடையாக மாறுவதைத் தவிர்த்து, 'சாட்சியங்களை டிஜிட்டல் முறையில் ஆவணப்படுத்தல், சர்வதேச சட்ட நிபுணர்களுடன் பணிக்குழு அமைத்தல், மற்றும் ஐநா. மனித உரிமை அமைப்புகளுக்குத் தொடர்ச்சியான வழக்குகளைக் கையளித்தல்' போன்ற நடைமுறைச் சாத்தியமான செயல் திட்டங்களை முன்னெடுத்தால் மட்டுமே இம்மாநாட்டின் மூலம் விதைக்கப்பட்ட நீதிக்கான விதை விருட்சமாக வளர முடியும்.

அங்ஙனம் இல்லாதபட்சத்தில், இதுவும் கால ஓட்டத்தில் கடந்து போகும் மற்றொரு வருடாந்த நினைவேந்தல் நிகழ்வாகவே எஞ்சிநிற்கும் என்பதை எந்தவொரு பங்குதாரர்களும் மறுதலித்துச் செயற்பட முடியாது.

• • •

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .



இ.ஜோயல்
செல்வநாயகபுரம்

## கல்வி - என் பயணம்

காலையில் அலாரம் அடிக்கல
கல்வி தான் என்ன எழுப்புது...
கனவு பெருசா இருந்தா
கஷ்டம் கூட சின்னதா தெரியுது...

சிலேட்டு கோடு இல்ல
வாழ்க்கையோட கோடு அது...
தப்பா எழுதுனாலும்
அழிச்சு திரும்ப எழுத கத்து கொடுக்குது...

மார்க் தாள் இல்ல கல்வி
மனுஷனா மாற்றுற மந்திரம் அது...
பணம் கைய மாற்றும்
ஆனா கல்வி தலையெழுத்தை மாற்றும்...

இன்னைக்கு நீ படிக்கிற வியர்வை
நாளைக்கு உன் வெற்றியோட மழையா மாறும்
அதனால நில்லாமல் ஓடு...
ஏன்னா புத்தகம் திறக்குற ஒவ்வொரு தடவையும்
உன் எதிர்காலத்தின் ஒரு பக்கம் திறக்குது...

மு.உ . ஷமீரா
பாலையூற்று

## ஒற்றுமையே பலம்

மீனாட்சிபுரம் எனும் ஊரில், ஒரு சிறிய கிணற்றினை சுற்றி ஐந்து குடும்பங்கள் இருந்தார்கள். எல்லோரும் உறவினர்கள் மற்றும் விவசாயக் குடும்பங்களாக இருந்தார்கள். அதனால் விவசாயம் செய்வதற்கு தண்ணீருக்காக மாறிமாறி சண்டைப்போட்டபடியே தனித்தனியா விவசாயம் பண்ணினார்கள். இதனால் தண்ணீர் ஒரு சிறிய காலத்திலே வற்றி வரட்சி ஏற்பட்டது. விவசாயம் கூட ஒருவராலும் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டதால் நீர், உணவு இல்லாமல் மிகவும் சிரமப்பட்டனர். அப்பொழுது தான் அவர்கள் செய்த தவறை உணர்ந்துகொண்டார்கள்.

பின்னர் ஐந்து குடும்பங்களும் சேர்ந்து ஒரு முடிவு எடுத்தார்கள். இப்படி தனித்தனியாக சண்டையிட்டுட்கொண்டு விவசாயம் செய்தால் எம்மால் ஒன்றும் செய்ய முடியாது. ஆகவே ஒற்றுமையாக செயற்படுவோம் என்றார்கள்.

அதில் ஒருவர், "ஒவ்வொரு முறையும் ஒரு குடும்பம் வீதம் விவசாயம் மேற்கொண்டு , எல்லோரும் பகிர்ந்து எடுப்போம்" என்னும் ஆலோசனை முன்வைத்தார். இதற்கு எல்லோரும் உடன்பட்டு ஒவ்வொரு போகமும் ஒவ்வொரு குடும்பங்களாக விவசாயம் செய்து , பகிர்ந்து உண்டு ஒற்றுமையாக வாழ்ந்தார்கள். அப்பொழுது தான் ஒற்றுமையாக வாழ்வதின் பயன்களை புரிந்து கொண்டார்கள். ஆகவே ஒற்றுமையாக இருப்பதே மிகவும் பலமாகும்.

பி.ஹர்ஷினி
பாலையூற்று

## என் பள்ளிக்கூடம்

காலை வேளை மணி அடிக்க
கனவுகள் கூட ஓடி வரும்...
நண்பர்கள் கூட்டம் சிரிப்பு சத்தம்
அறிவு விளக்கு ஏற்றி வரும் ...

வாத்தியார் சொல்லும் பாடம்
எல்லாம்
வாழ்க்கைக்கான பாடம் ஆகும் ...
பேனா பிடித்த கைகள் இங்கே
நாளை உலகை தாங்கும் ...

விளையாட்டு மைதானம் சிரிக்கும்
வெற்றி தோல்வி கற்று தரும் ...
அடம்பன் கொடி போல நாங்கள்
ஒன்றாய் சேர்ந்து மிடுக்காவோம் ...

பள்ளிக்கூடம் இரண்டாம் வீடு
பண்பை சொல்லித் தரும் கோவில் ...
நான் வளர்ந்த கதை எல்லாம்
இங்கே தான் எழுதப்படும் ...

கு.திகழினி
கன்னியா




# தாயகமும் வாழ்வும்





இயற்கையிலிருந்து
இணக்கம்... படைப்பில்
பெருமை!





